விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 29 வெள்ளிக்கிழமை (12.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

# அரசுக்கு எதிராக அணி திரளுங்கள்!



## மகிந்த கிளர்ச்சி அறைகூவல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நாட்டையும், இராணுவ வீரர்களையும் சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் அணி திரளவேண்டும் என பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

## யானைக்குட்டிகள்; விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்குரிய ஆணையொன்றின் மூலம் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு 4 யானைக்குட்டிகளை வழங்கியது தொடர்பாக குற்

23ஆம் பக்கம் பார்க்க

## சுயாதீனமான உள்ளக விசாரணையில் நம்பகத்தன்மையிருப்பின் ஏற்கத் தயார்

### ரொய்ட்டருக்கு ஹுசைன் செவ்வி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் உள்ளக விசாரணைப் பொறிமுறை சுயாதீனமானதாகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்குமிடத்து அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான விஜயத்தினையடுத்து, ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத்

23ஆம் பக்கம் பார்க்க



## வட கொரியாவுக்கு இலங்கை கண்டனம்

(கொழும்பு)

வடகொரிய கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீண்டதூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணையை பரிசோதித்தமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## உரும்பிராயில் நேற்று ஆயுதக்குழு அடாவடி

(புன்னாலைக்கட்டுவன்)

மோட்டார் சைக்கிளில் வாள் மற்றும் ஆயுதங்களுடன் வந்த 6 பேர் கொண்ட இனந்தெரியாத குழு ஒன்று கடைகளுக்குள் புகுந்து சரமாரியாக தாக்கியதில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மேலும் ஐவர் காயங்களுக்கு இலக்காகியுள்ளார்கள்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30

23ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் மங்கள யாழில்



23ஆம் பக்கம் பார்க்க

### முதலாவது அனைத்துலக

## சைவ மாநாடு-2016

### கைலாசபதி கலையரங்கில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்தும் முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெறவுள்ள இவ் வைபவத்தின் தொடக்க நாள் நிகழ்வுகள் யாழ. பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்துமத தலைவர்கள், பேராசி

23ஆம் பக்கம் பார்க்க

## அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு நடந்த அதிபர் தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

நாடு பூராகவும் நடந்த இப் போட்டிப் பரீட்சையில் 4431 அதிபர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு ஏற்பாடாகியிருந்த போதிலும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 4079 பேரே நேர்முகத் தேர்வுக்கு தகைமை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த 420 பேர் தகைமை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர் விபரங்களை moe.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும். (ந)

## இராணுவ அதிகாரிகளை இலங்கை பாதுகாக்கிறது

### மனித உரிமை கண்காணிப்பகம் கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து, நியூயோர்க்கை தளமாக கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் சரத் பொன்சேகாவின் கட்டளையின கீழ் செயற்பட்ட இலங்கை படையினர், பொதுமக்கள் மற்றும் மருத்துவமனைகள் மீது சட்டவிரோத

24ஆம் பக்கம் பார்க்க

## மாணவன் மரணத்துக்கு கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

பேருந்துகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டி காரணமாக விபத்தில் மரணமடைந்த பாடசாலை மாணவனின் மரணத்துக்கு காண்டனம் தெரிவிக்கும் முகமாகவும் விதிமுறைகளை மீறும் வாகன சாரதிகளுக்கு எதிராகவும் யாழில் இன்று வெள்ளிக்கிழமை கண்

24ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவுக்கு புதிய அலுவலகம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் ஒன்று இன்றைய தினம் பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் திறந்து வைக்கப்பட உள்ளது.

இந்த நிகழ்வில் மகிந்த ராஜ

24ஆம் பக்கம் பார்க்க

### காணாமல்போனோர் தொடர்பான

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட விசாரணை யாழில்

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்தகட்ட சாட்சி விசாரணைகளை யாழ் குடாநாட்டில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளிலும், மார்ச் முதலாம் திகதியும் சாட்சி விசாரணை

24ஆம் பக்கம் பார்க்க

## தொடர் மோதல்களில் பல்கலை மாணவர்கள்

### ஐவரின் கல்வி செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையே ஏற்படுகின்ற குழு மோதல் நடவடிக்கைகளால் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் தொடர்ச்

23ஆம் பக்கம் பார்க்க

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கும் இராஜவீதி சந்திக்கும் இடையில் Farm, Store தர்ம ஸ்தாபனம் அமைக்கக்கூடிய தான 10 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

**தொடர்பு :-**
**0777037058**

(3574)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603**
**021 567 1532**

---

**CAPS**

'CAPS'(Near Sampath Bank )
No.52, Palaly Road,
Thirunelvely.

T.P:-
021 205 2262
077 3867458

❖ **SLEAS தெரிவுப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பம்**

திகதி :- 18.02.2016 ( வியாழக்கிழமை )
நேரம் :- மாலை 3.00 - 6.00
வளவாளர் :- பேராசிரியர் மா.சின்னத்தம்பி

❖ **சிங்களவகுப்புக்கள் ஆரம்பமாகும் –21.02.2016**

- தமிழ்மொழி மூலம் சிங்களம்
- அரசியல் நிர்வாகத்துறை
- பொதுமக்கள் கலந்துரையாடல்
- மேடைப்பேச்சு ஆகியவற்றுக்கான

முழுமையான நடைமுறை கலந்துரையாடல்கள்

வழிகாட்டல் :- கலாநிதி சி. மோகன்
(முன்னாள் ஒருங்கிணைப்பு செயலாளர்,
தேசியமொழிகள் மற்றும் சமூக
ஒருமைப்பாடு அமைச்சு)

**சனி, ஞாயிறு 9.00 – 12.00**

(3569)

---

## வேலை வாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு

ஆசியாவில் மிகப்பெரிய காப்புறுதி நிறுவனமான **AIA** குழுமத்தின் இலங்கை நிறுவனமான **AIA Insurance Lanka PLC** நிறுவனம் உங்களின் எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டும் வகையில் வேலைவாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

**திகதி - 13.02.2016**
**நேரம் - பிற்பகல் 3.00 - 5.00 மணிவரை**
**இடம் :- லிங்கன் கிறீம் ஹவுஸ்**
**1-ம் மாடி ஸ்ரான்லி வீதி , வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.**
**வயதெல்லை :- 25 - 60**

### *அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

இப்பெறுமதியான வாய்ப்பினை பயன்படுத்தி உங்களின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான தைரியத்தையும் தன்னம்பிக்கையும் பெற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**முற்பதிவு மேற்கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்**

**தொடர்புகளுக்கு : AIA Insurance Lanka PLC**
**62/6, Stanley Road, Jaffna**
**021 222 1216, 076 528 9947**

(3571)

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### கந்தையா மேரிலூத்து (பூமணி)

(யாழ்ப்பாணம் நல்லூர்)



பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே! எம் வாழ்வில் ஒளி
விளக்கேற்றிய எம் அன்பு தெய்வமே
ஏழாண்டு என்ன ஏழாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு மாறாது



பிறப்பு 1948.09.27
இறப்பு 2009.02.12

ஆனந்தபுரம் கிழக்கு கிளிநொச்சி.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள் :- கலா, ஈசன்
(மணியம்மா உணவகம்)

(C-3667)

---

## மழலையின் பிரிவால் துயருறும் திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்

பார்த்தீபன் சுவஸ்திகன்



வட்டமிட்டு எம் வளாகத்தில் வலம் வந்தவனே
சிட்டாக பறந்து சிறகடித்து எம்முள்ளத்தில்
தடம் பதித்தாய்
எட்டாத இடத்திற்கு சென்று
எம்மை உருக்குலைத்து விட்டாய்
சுவஸ்திகனே! நீ எம் குடும்பத்தில் ஒருவன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(3570)

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்

---

## மணிவிழா நாயகனே வாழி நீடு!



பொன்மனச் செம்மல், மனிதநேய ஈகையாளன்,
கல்விக் காருண்யன்

**லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம்**

பெற்றதாயையும் பிறந்த தாய்நாட்டையும் மதிப்பவர்
உற்றாரின்றி தவிப்போர்க்கு உறுதுணையாய் நிற்பவர்
உயர்வு தாழ்வெனும் பேதங்கள் அற்றவர்
ஊரார்க்குதவிட நல்லூர் லயன்ஸில் உறுப்பினராகினார்.
**தெல்லி நகரில் புற்றுநோய்க்கு நிலம் வழங்கிய வள்ளல்**
ஊர்போற்றுமுத்தமனாய் விளங்கிய கல்விக் காருண்யன்
அணியணியாக அன்பர்கள் வாழ்த்திடும் ஐயாவே நீவீர்
மணிவிழாக் கண்டு பலநூறாண்டு சிறப்புடனே வாழி நீடு!
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய்
சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கு நிலம் கொள்வனவு
செய்து வழங்கி உதவி "நட்பும் தயையும் கொடையும்
பிறவிக் குணம்" என்ற வாக்குக்கு இலக்கணம் கற்பித்து,
புற்றுநோயாளர்களின் மருத்துவத்துக்கு பேருதவி புரிந்த
செம்மலை மணிவிழா நாளில் மனதார வாழ்த்தி
உவகையுறுகின்றோம்.

நோயாளர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

(C-3672)

---

**26 வருடங்களின் பின் மக்களின் நலன்கருதி உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் சென் றோசாரி தேவாலயம், குளத்து அம்மன் ஆலயத்தை பார்வையிடவும் பூஜை வழிபாடாற்றவும் மக்களை அழைத்து செல்கின்றார் அங்கஜன்.........**

மக்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதியின் வழிகாட்டலில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் சென் றோசாரி தேவாலயம், குளத்து அம்மன் ஆலயத்தை 13.02.2016ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பார்வையிடுவதற்கும் பூஜை வழிபாடுகள் நடைபெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே செல்ல விரும்பும் மக்கள் மயிலிட்டி கிராமத்தில் வசித்தவர்கள், நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்கள் மற்றும் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்பவர்கள் கீழ் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் தங்கள் பதிவினை மேற்கொள்ளவும்.



1. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம்
இல.207, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

2. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.



3. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம்
உடுப்பிட்டி விநாயகர் வித்தியாலய வீதி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

4. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம்
இல.80, கோவில் வீதி,
நல்லூர்.

(3575)

# யாழில் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டம் ஆரம்பம்

யாழ்.மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாடு விசேட வேலைத் திட்டம் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக 3 நாட்கள் நடைபெறவுள்ள இந்த விசேட செயற்றிட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்துக்கு பலர் உள்ளாகியிருப்பது இனங்காணப்பட்டுள்ளது. எனவே டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கையில் ஈடுபடுவது மிக அவசியம் ஆகும்.

அந்த வகையில் 3 நாட்கள் விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அதில் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்தில் இருந்து எம்மை பாதுகாக்கும் முகமாகத் தடுப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியது அனைவரது கடமையாகும். அதன் மூலமே டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து நாம் விடுபட முடியும்.

அந்த வகையில் பொது மக்களின் வாழ்விடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்கள் போன்றவற்றின் சுற்றுச்சூழலை துப்புரவாக பேண வேண்டும் என அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விசேட டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தில் பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேசசபை ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலுள்ள அதிகாரிகள் இணைந்து டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அத்துடன் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த முறை டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கையெடுக்கப்படவுள்ளது.

எனவே, அனைவரும் தங்கள் சூழலை டெங்கு நுளம்பு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் வீடுகளின் களதரிசிப்புக்காக வருகின்ற குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



# தலைவர் பிரபாகரன் வீட்டை உடைக்கக் காரணம் என்ன?

## சிங்கள மக்களுக்கு தமிழர் கலாசாரத்தை புகட்டி இராணுவ வீரன் விளக்கம்

*தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டை இராணுவத்தினர் உடைக்கக் காரணம் என்ன? என்பதையும் நயினாதீவுக்கு விஜயம் செய்திருந்த சிங்கள மக்களுக்கு தமிழர்களின் கலாசாரம் தொடர்பாகவும் இராணுவ வீரர் ஒருவர் விளக்கம் கொடுத்துள்ளார். அது தொடர்பாக காணொலி சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்டுள்ளது. அதில் குறித்த இராணுவ வீரர் பின்வருமாறு சிங்கள மக்களுக்கு உபதேசம் செய்கிறார்.*

*"30 ரூபாய் கொடுத்தால் போட்ல (boat) கொண்டு போய் நாகதீபவில் இறக்கிறார்கள். நீங்கள் அங்க இருந்து வந்து புத்த சிலைக்கு முன்னால் போய் இருந்து போட்டோ பிடிச்சு பேஸ்புக்ல போடுறீங்கள். நீங்கள் பூ வைக்கும் போதும், விளக்கு கொளுத்தும் போதும் போட்டோ பிடிச்சு பேஸ்புக்ல போடுறீங்கள். உங்களுக்கு கிடைத்த பெரிய சுதந்திரம் இதுதான் என நினைக்கிறீர்கள்.*

*நீங்கள் கோயில்களுக்கும் பள்ளிவாசல்களுக்கும் போய்ப் பாருங்கள். அங்கு ஒவ்வொரு சட்டங்கள், ஒழுங்குகள் இருக்கு. அதனை முக்கியமாக தமிழ் மக்கள் கடைப்பிடிக்கிறார்கள். உங்களின் மனச்சாட்சியைக் கேட்டுப்பாருங்கள். 30 வருடமாக நாங்கள் சண்டை பிடித்தோம். எத்தனை பேர் விகாரைகளில் இந்த சட்ட திட்டங்களை கடைப்பிக்கிறீர்கள்.*

*உங்களுக்கும் எங்களுக்கும் எந்த விரோதமும் இல்லை. நல்வழிப்படுத்தவே இதனைச் சொல்கிறேன். யாரையும் குத்திக் காட்டவில்லை. இலங்கையில் பெரிய கோயில்களில் ஒன்று நல்லூர் கோயில். அங்கு இப்பவும் அதே சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.*

*இப்போது கொழும்பு விகாரைக்குப் போனால் வெள்ளைச் சீலையும் வெள்ளைத் துண்டும் வைத்துள்ளார்கள். அது போல இந்துக் கோயில்களில் செய்கிறார்களா?*

*வேறுபாட்டை புரிந்து கொள்ளுங்கள். இங்கு இரண்டு நாள் வந்துவிட்டு போவீர்கள். நாங்கள் இங்கு தொடர்ந்து இருக்கின்றோம். கலாசாரத்தை பேண வேண்டும்.*

*நாகதீபவில் 162 தமிழ் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உங்களை பார்ப்பார்கள். உங்களுடைய கலாசாரத்தை என்னவென்று புகட்டப்போகிறீர்கள்.*

*பிரபாகரனின் வீட்டை உடைக்க இதுவே காரணம். நீங்கள் அங்கேயும் வந்து இதைத்தான் செய்யப் போகிறீர்கள். யுத்தம் முடிவடைந்து விட்டது. அவர்களின் மனங்களில் இருந்து அதனை எடுத்துப் போட வேண்டும்.*

*நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் தெற்கு சிங்களவர்களுக்கு. வடக்கு தமிழர்களுக்கு என்று. இது ஒரு நாடு. எந்த இடத்திற்குச் சென்றாலும் அவர்களின் கலாசாரத்தைப் பேணி பாதுகாக்க வேண்டும்.*

*மாவீரர்களின் தூபிகளை அழித்தோம். ஏனென்றால் நீங்கள் கொழும்பிலிருந்து 10 பேர் வருவீர்கள். நாங்கள் அதே இடத்தில் எங்களுடைய வீரர்களின் தூபிகளை உருவாக்கி இருந்தால் நீங்கள் வணக்கம் செலுத்துவீர்களா? இல்லை.*

*ஆனால் பிரபாகரன் உருவாக்கிய மாவீரர் இல்லங்களுக்கு அனைவரும் வணக்கம் செலுத்தித்தான் போவார்கள். அப்படித்தான் இருந்தது. அதனால் தான் நாங்கள் அழித்தோம். இந்த வேறுபாட்டினை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சொல்கிறேன். நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் வந்து சந்தோசமாக இருந்து போறீங்கள். எதனை கற்றுக் கொண்டு போகிறீர்கள். நாங்கள் இங்கு இருந்து இவர்களுடன் பழகுகின்றோம். நான் பயமில்லாமல் சொல்வேன்.*

*சிங்களவர்களால் தான் அழிவு கூடுதலாக உள்ளது. எந்த தமிழனோ, முஸ்லிமோ தன்னுடைய தவையோ தங்கையையோ பாலியல் பலாத்காரம் செய்யவும் இல்லை. கழுத்தை வெட்டவும் இல்லை.*

*செய்யிறதெல்லாம் சிங்களவன் தான். நானும் ஒரு சிங்களவன்தான். பயம் இல்லாமல் சொல்லுவன். நீங்கள் இங்கு பிள்ளைகளைக் கூட்டி வருகிறீர்கள். இங்கு உள்ள கலாசாரத்தை கற்றுக் கொடுங்கள். வேறுபட்ட கலாசாரத்தை சொல்லிக் கொடுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (இ)*

# மகிந்த ஆட்சியில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு கிடையாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படாது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடனும் சுயாதீனமானதுமான முறையில் நடத்தப்படுகின்றது.

ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவில்லை.

எவ்வாறெனினும் முழு அளவில் விசாரணைகளை நடத்த போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இந்து நாகரிகத்துறை நடத்தும் அனைத்துலகச் சைவமாநாடு-2016 யாழ்.பல்கலையில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை நடத்தும் முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016 இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமை தாங்கி நடத்தவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன், யாழ்.இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத் துறை வழங்கும் பஞ்சபுராண ஆடல் இடம்பெறும்.

வரவேற்புரையினை இந்து நாகரிகத்துறை மாநாட்டுச் செயலாளர் கலாநிதி திருமதி.விக்னேஸ்வரி பவநேசன் நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரைகளை தமிழ்நாடு சிதம்பர தேவஸ்தான பிரம்மஸ்ரீ கணேச பரமேஸ்வர தீட்சிதர் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தர்மசாஸ்தா குருபீட முதல்வர் சிவஸ்ரீ தாணுமகாதேவக் குருக்கள், ஸ்ரீ பரமேஸ்வர தேவஸ்தான பிரதமகுரு, சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்தி ஹரக்குருக்கள், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ. ப.மனோகரக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை இந்து சமயப் பேரவையின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மேனாள் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் தொடக்கவுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடமேனாள் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் நிகழ்த்தவுள்ளார்.

மாநாட்டுத் தலைவர் உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் நிகழ்த்தவுள்ளார்.

மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் கலா நிதி திருமதி சுகந்தினி சிறீமுரளிதரன் நிகழ்த்தவுள்ளதுடன் ஆதாரசுருதி உரையினை தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் க.பாஸ்கரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

### யோஷிதவுக்கு மீண்டும் மறியல்

யோஷித ராஜபக்ஷவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு கடுவல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரை நேற்று மீண்டும் கடுவல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

சி.எஸ்.என் தொலைக்காட்சியில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் யோஷித உள்ளிட்ட நால்வர் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

### விமானங்கள் திருப்பப்பட்டன

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடுமையான பனிமூட்டம் காணப்பட்டமையால், அங்கு தரையிறங்கச் சென்ற மூன்று விமானங்கள் மத்தல விமான நிலையத்திற்கு திருப்பப்பட்டன.

நேற்றுக் காலை நிலவிய கடும் பனிமூட்டம் காரணமாக விமானங்கள் தரையிறங்குவதில் சிரமங்களை எதிர்நோக்கின. இதனையடுத்தே மூன்று விமானங்களையும் மத்தல விமான நிலையத்திற்கு அனுப்பியதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணம்

## பங்களாதேஷ் அணியை வீழ்த்தி மே.தீவுகள் இறுதிப் போட்டிக்கு தகுதி

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண தொடரின் 2ஆவது அரையிறுதி போட்டியில் பங்களாதேஷை 8 பந்துகள் மீதமிருக்கையில் 3 விக்கெட்டுகளால் வீழ்ததியது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

ஜூனியர் உலகக் கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் அரையிறுதியில் இலங்கையை 97 ஓட்டங்களால் வீழ்த்திய இந்தியா இறுதிப் போட்டிக்கு ஏற்கெனவே நுழைந்திருந்தது.

இந்நிலையில் நேற்று டாக்காவில் நடந்த 2ஆவது அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் மொஹடி சைபுதீன் நிதானமாக ஆடி 60 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கீமோ பால் 3, ஸ்பிரிஞ்சர், ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.


227 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடினாலும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழக்க ஆரம்பித்தது.

இருப்பினும் தட்டுத்தடுமாறி விளையாடிய மேற்கிந்தியதீவுகள் அணி 48.4 ஓவரில் 7 விக்கெட்டுகள் இழந்து 230 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக அணித்தலைவர் ஹெட்மையர் 60 ஓட்டங்களும், ஸ்பிரிஞ்சர் 62 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியதீவுகள் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

நாளை மறுதினம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்தியாவை எதிர்கொள்ள உள்ளது. (க)




**Special General Meeting of the Jaffna Science Association**

A Special general meeting of the Jaffna Science Association (JSA) is scheduled to be held on 25th of February at 10.00 am at the Physics Mini Auditorium, Faculty of Science, University of Jaffna.

**Agenda**

- Introducing foreign memberships
- Appointing an advisory / monitoring panel for JSA activities
- Registering the JSA as a non - profit making company

All members are kindly requested to present to the meeting

Thank you
General Secretary
Jaffna Science Association
http://www.thejsa.org/ (3572)







# இலங்கை - இந்தியா 2-வது இருபது - 20 இன்று

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட இருபது -20 போட்டித் தொடரில் புனேயில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்திய அணி அதிர்ச்சிகரமாக தோற்றது.

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 போட்டி ராஞ்சியில் இன்று நடக்கிறது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இந்திய அணி பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டிய நெருக்கடியும் உள்ளது. தோற்றால் தொடரை இழந்துவிடும். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக வைட் வோஷ் செய்த இந்திய அணி சொந்த மண்ணில் தோல்வி அடைந்தது எதிர்பாராத ஒன்றாகும்.

இதற்கு முன்னர் சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவிடம் 20 ஓவர் தொடரை இழந்து இருந்தது. அந்த நிலைமை ஏற்படாமல் இருக்க கண்டிப்பாக இலங்கையை வீழ்த்த வேண்டும்.

தோனி தனது சொந்த ஊரில் விளையாடுவதால் வெற்றியை பெற்று தருவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. புனே ஆட்டத்தில் இந்தியாவின் துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதை சரி செய்வது அவசியமாகும்.

இலங்கை புதுமுக வீரர்கள் ககன் ரஜித, தகன் ஷனக, சேனநாயக்க மற்றும் சமீரா ஆகியோரது பந்து வச்சு இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக இருந்தது.

இலங்கை அணி முதல் ஆட்டத்தில் பெற்ற வெற்றியால் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. அந்த அணி மீண்டும் வீழ்த்தி தொடரை வெல்லும் ஆர்வத்துடன் உள்ளது.

காயம் காரணமாக முதல் ஆட்டத்தில் விளையாடாத டில்சான் ஆடுவது அந்த அணிக்கு கூடுதல் பலமாகும். இன்று நடைபெறும் போட்டி இரு அணிகள் மோதுவது 8ஆவது இருபது-20 ஆட்டமாகும். இதுவரை நடந்த 7 போட்டியில் இந்தியா 3 இல் இலங்கை 4இல் வெற்றி பெற்றுள்ளன.

இரவு 7 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டம் ஸ்ரார் ஸ்போர்ட்ஸ், தூர்தர்சனில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

**இரு அணி வீரர்கள் விவரம்,**

இந்தியா :- தோனி (அணித் தலைவர்), தவான், ரோகித் சர்மா, ரகானே, ரெய்னா, யுவராஜ்சிங், ஹர்த்திக் பாண்டியா, ரவிந்திர ஜடேஜா, அஸ்வின், ஆசிஷ் நெஹ்ரா, பும்ரா, மனிஷ்பாண்டே, பவான் நெகி, ஹர்பஜன் சிங், புவனேஸ்வர் குமார்.

இலங்கை: சண்டிமல் (அணித் தலைவர்), டில்சான், குணதிலக, கபுகெதர, சிறிவர்தன, தகன் ஷனக, பிரசன்ன, பெரேரா, சேனனாயக்க, சுகன் ரஜித, சமீர, நிரோஷசன், டிக்வெல்ல, டில்கார பெர்னாண்டோ, குணரத்ன, பினுரா பெர்னாண்டோ, ஜெப்ரிவான் டர்சே. (க)


யா/ நீர்வேலி சி.சி.த.க பாடசாலை
வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2016

காலம்: 12.02.2016 வெள்ளிக்கிழமை
நேரம்: பி.ப 2.00 மணி
இடம்: பாடசாலை மைதானம்

தலைவர்
திரு.தி.ரவீந்திரநாதன் அவர்கள்
(வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்
திரு.ம.பிரதீபன அவர்கள்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய்)

சிறப்பு விருந்தினர்
திரு.இ.ரவிராஜ் அவர்கள்
(முகாமையாளர், L.B.Finance,
யாழ்ப்பாணக் கிளை, யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்
திரு.பா.சசிகுமாா அவர்கள்
(பழைய மாணவன், ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலைச் சமூகம்,
யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை, நீர்வேலி.

விளம்பர அனுசரணை
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5542
(C-3675)

SB TRAVELS & TOURS (PVT) LTD
216, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9555
(C-3676)


# ஆஸி-நியூசிலாந்து இன்றைய டெஸ்ஸில் சாதனை படைக்க காத்திருக்கும் மக்கலம்

நியூசிலாந்து அணியின் அதிரடி வீரரரும், அணித் தலைவருமாக இருந்து வருபவர் பிரண்டன் மக்கலம். இவர் கடந்த வாரம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் தொடருடன் சர்வதேச ஒருநாள்போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று தொடங்குகிறது. 2ஆவது டெஸ்ட் 20ஆம் திகதி தொடங்குகிறது. இந்த இரண்டு போட்டிகளுடன் மக்கலத்தின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது.

இன்று நடைபெற இருக்கும் டெஸ்டில் மக்கலம் இரண்டு முக்கிய மைல்கல்லை எட்டவுள்ளார். ஒன்று, அவர் தனது 100-வது டெஸ்டில் விளையாடுகிறார். தான் அறிமுக மானதில் இருந்து இதுவரை ஓய்வில்லாமல் தொடர்ச்சியாக 100 டெஸ்டில் கலந்து கொள்கிறார்.

மற்றொன்று நியூசிலாந்து அணிக்காக 100 ஆவது டெஸ்டில் விளையாடும் 3 ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இதற்கு முன் சுழற்பந்து வீச்சாளர் டானியல் வெட்டோரி 112 டெஸ்டிலும், முனனாள் அணித் தலைவர் ஸ்ரீபுன் பிளமிங் 111 டெஸ்டிலும் நியூசிலாந்து அணிக்காக விளையாடியுள்ளனர். தற்போது இந்த இரண்டு டெஸ்ட் மூலம் 101 டெஸ்டில் விளையாடி மக்கல்லம் 3-வது வீரராக இடம் பெறவுள்ளார்.

இதற்கு முன் தென்னாபிரிக்க அணியின் தலைவர் டி வில்லியர்ஸ் தொடர்ச்சியாக 98 டெஸ்டில் இடம் பெற்றிருந்தார். அதிகபட்சமாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் அன் போர்டர் 153 போட்டிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளார். ஆனால், போர்டர் தான் அறிமுகமான போட்டியில் இருந்து தொடர்ச்சியாக 153 போட்டியில் விளையாடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)



# ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

## வாரிவளவு - காரைநகர்

# மஹா கும்பாபிஷேகம்

**12.02.2016 வெள்ளிக்கிழமை**

**காலை 6.01 மணி முதல் 7.30 மணிவரை**

**இராஜகோபுர, விமான (ஸ்தூபி) அபிஷேகங்களும்,**

**முற்பகல் 8.49 மணி முதல் 10.29 மணிவரை**

**மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும்**

(சி-3742)

கும்பாபிஷேக தின மாலை நிகழ்ச்சிகளாக பிரபல தவில், நாதஸ்வர வித்துவான்களின் "நாத கான மழை" நடைபெறும்.




தென்னிந்தியத் திரைப்பட பாடகர் Dr.T.M.S.பால்ராஜ் குழுவினரின் திரை இசைப் பாடல்கள் கலந்த "பக்தி இன்னிசை" நடைபெறும்.

**உபயகாரர்கள்.**

# புதிய சட்டமா அதிபர் சத்தியப்பிரமாணம்



புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று முற்பகல் சத்தியப் பிரமாணம் செய்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் புதிய சட்டமா அதிபராக சத்தியப்பிரமாணம் செய்த ஜயந்த ஜயசூரிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் அதிபதி ஆவார்.

இந் நிகழ் வின் போது ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன் மற்றும் ஜயந்த ஜயசூரிய குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (இ)

# எரிபொருளின் விலை குறைப்பிற்கு அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## டக்ளஸ் எம்.பி கேள்வி

உலகச் சந்தையில் எரி பொருளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டும் இதுவரையில் அதன் பயனை எமது நாட்டு மக்கள் அனுபவிப்பதற்கு வாய்ப்பு கிட்டாதுள்ளமை துரதிர்ஷ்டவசமான நிலைமையாகுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

எரிபொருளின் விலை உலகச் சந்தையில் வீழ்ச்சியுற்றுள்ளது. ஆனால் இலங்கையில் இன்னும் அதனது விலையில் மாற்றங்கள் ஏதும் செய்யப்படாத நிலையே காணப்படுகின்றது.

இன்றைய நிலையில் அத்தியாவசிய பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்ற ஒரு சூழ்நிலையும் தொடர்கிறது.

இவ்வாறான நிலையில் எரிபொருளின் விலை குறைக்கப்படுமானால் ஏனைய பொருட்களின் விலைகளிலும் வீழ்ச்சியேற்படும். எனவே அரசு இதனை அவதானத்தில் எடுத்து செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

**விற்பனைக்கு**

10KVA Lister England டீசல் ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு

தொடர்பு:- 0772242394 (3548)

**ஷைலோ ஐஸ் கிறீம் வெற்றிடங்கள்**

◆மனேஜர் (பொறுப்பாளர்): ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனையில் நன்கு அனுபவமும் கோயில் முதலான இடங்களில் இடம் எடுத்து தற்காலிக விற்பனை நிலையம் அமைத்து விற்பனை செய்தல் திறன் மற்றும் நிர்வாக திறமையுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

◆ஐஸ்கிறீம் வாகனத்தில் விற்பனையாளர்கள்: ஐஸ்கிறீம் விற்பனை மற்றும் கையாள்வதில் அனுபவமும் திருவிழாக்கால வாகன அனுமதி, விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

◆ரெஸ்ரோரண்ட் வெயிட்டர்கள் (உணவு பரிமாறுநர்): உணவு மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் அனுபவமும் வாடிக்கையாளர்களுடன் நன்றாக பேசக்கூடிய சுத்தமான சுகாதார பழக்கவழக்கமுள்ள உணவு பரிமாறுநர்கள், பல்மொழி திறன், யூனிபோம், சூ, ரை அணியக்கூடியவர்கள் நேரில் வரவும். (ஆண்/பெண் இருபாலாரும்)

திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், EPF, ETF என்பன கிடைக்கும்.

(3558)

இல.442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

077 771 0785

# தப்பாட்ட பயிற்சி பாசறை

வடமாகாணத்தில் தமிழக கலைஞர்களால் நடத்தப்படவுள்ள வீச்சுக் கொண்ட தமிழரை வீறுகொண்டெழுப்புவோம் எனும் தொனிப் பொருளிலான தப்பாட்ட பயிற்சிப் பாசறை இம்மாதம் நடைபெறவுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் இம்மாதம் 20, 21,22 ஆம் திகதிகளிலும் வவுனியா மாவட்டத்தில் 24,25,26 ஆம் திகதிகளிலும் திருகோணமலை மாவட்டத்தில் 27,28,29 ஆம் திகதிகளிலும் பயிற்சிப் பாசறைகள் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சிப் பாசறையில் கலந்து கொள்ள விரும்புவோர் 077 844 9744, 077 248 7861 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தமது வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 61செவ் 1 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் அவுஸ்திரேலிய குடியுரிமை<br>தொ.இ: B/3902 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 23செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:CBF, DBF/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/4441 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 56செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/3903 | பிறப்பு: 1986RC<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16உயரம்: 150CM<br>தகைமை/தொழில்:DIPLOMA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4443 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 21செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: . விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/3904 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 22<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/4444 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 69செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன் NOT PR<br>தொ.இ: B/3909 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 43செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:MSC இந்தியா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4445 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

# இராசி பலன்

**12.02.2016**

**(தை 29, வெள்ளிக்கிழமை)**

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.28 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 1.01 மணிவரை
சுபநேரம் 6.34-8.04 மணிவரை
இராகுகாலம் 11.04-12.34 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம், உத்தரம் | | |
| சூரி<br>புத | | | குரு<br>ராகு |
| சுக் | சனி | செவ் | |

**மேடம்**: வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்**: இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**: தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**கடகம்**: முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல் நலன் சீராகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்**: காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி**: தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்**: உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும், மறைமுக எதிர்ப்புகள் விலகும், வியாபார விருத்தியுண்டு, பழைய பாக்கிகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**: பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், தொலைபேசி வழியில் மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்**: பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்**: விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், குடும்பத்தில் மங்களகரமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மீனம்**: திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

# எனதருமை சகோதரர்களுக்கு புருஷோத்தமன் எழுதுவது




அன்புக்குரிய எனதருமைச் சகோதரர்களுக்கு அன்புவணக்கம். நீண்டகாலமாக உங்களுக்கு கடிதம் எழுத வேண்டும் என்ற பெருவிருப்பம் காலசூழ்நிலைகளால் கடந்து போயிற்று. தனித்து கால சூழ்நிலைகள் மட்டுமே காரணம் என்று சொல்லிவிடவும் என் மனச்சாட்சி இடம்தரவில்லை.

பொதுவான ஒரு வெறுப்பு நிலையும் அதனால் ஏற்பட்ட மனச்சோர்வும் கடிதம் எழுதுவதைத் தாமதமாக்கியது என்பதையும் சொல்லித்தானாக வேண்டும்.

எம் மரியாதைக்குரிய கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் உகரத்தில் எழுதிய கட்டுரைக்குப் பதில் எழுதியதன் காரணமாக புருசோத்தமன் என்ற இச்சிறியேனை தங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். கம்பவாரிதியின் தமிழ் வீச்சுக்கு நாம் ஈடுகொடுக்க முடியவில்லையாயினும் யாம் எழுதிய பதில் என தருமைச் சகோதரர்களுக்கு கடிதம் எழுத வேண்டும் என்ற விருப்பத்திற்கு மீள் ஊக்குசக்தியாக இருந்தது என்பதையும் சொல்லித்தானாக வேண்டும்.

அன்புக்குரிய சகோதரர்களே! யாம் உங்களுக்கு எழுதும் முதற்கடிதம் இது. இக்கடிதம் தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இதற்கு இறையாசியும் உங்களின் பதில் கடிதங்களும் உதவும் என்பது நம் நம்பிக்கை.

கடிதம் என்பது ஒருவழித் தொடர்பாடலைக் கொண்டதல்ல. கடிதம் கண்டதும் பதில் கடிதம் எழுதுவதுதான் நடைமுறை. பதில் கடிதம் இல்லையாயின் குறித்த கடிதம் போய்ச் சேரவில்லை என்றோ அல்லது குறித்த கடிதம் கோபத்தை ஏற்படுத்திவிட்டதோ என்று எண்ணத் தோன்றும்.

ஆகையால் என தருமைச் சகோதரர்களுக்கு என்ற இக்கடிதத் தொடருக்கு வாசகர்களாகிய உங்களின் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் பதில் கடிதமாகப் பெற விரும்புகின்றோம்.

கடிதம் எழுதும் கலாசாரம் வழக்கொழிந்து போயிற்று என்பது வெறுப்புக்குரிய உண்மையாயினும் கைப்பட கடிதம் எழுதி அதை அனுப்பி வைப்பதில் இருக்கக்கூடிய மன நிறைவை நீங்கள் இல்லை என்று மறுத்துரைக்கமாட்டீர்கள்.

கடிதம் என்பதற்குத் தமிழில் திருமுகம் என்றொரு பொருள் உண்டு. ஏசி எழுதுகின்ற கடிதமாயினும் நாம் சுகம் தங்கள் சுகத்திற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என எழுதுகின்ற தொடக்கவரிகள் ஏசி எழுதவேண்டும் என்ற மன வெழுச்சியைக் கட்டுப்படுத்தி விடுகின்றது.

மற்றவரின் வாழ்வுக்காக-நலத்திற்காக நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்ற பண்பாடு கடிதம் மூலமாக வெளிப்பட்டது. ஆனால் இப்போதெல்லாம் கடிதம் எழுதும் நடைமுறை இல்லாமல் போயிற்று.

ஆக வயது வந்தவர்கள் மாத்திரம் கடிதம் எழுதும் கலாசாரத்தை கொஞ்சமேனும் கைப்பற்றி வைத்துள்ளனர். அவர்களுக்குப்பின் கடிதம் என்றால் என்ன என்று கேட்கின்ற பரிதாப நிலையிலேயே எங்கள் இளம் சமூகம் இருக்கும் என்பது மட்டும் உண்மை.

கடிதம் எழுதும் மரபு இல்லாதொழிந்து வருகின்றதாயினும் தகவல் பரிமாற்றங்கள் வேறொரு வகையில் பிரவாகம் பெற்றுள்ளன என்பதையும் மறுதலிப்பதற்கில்லை.

மின்னஞ்சல், குறுஞ் செய்தி, தொலைநகல், தொலைபேசி என்ற தொழில்நுட்ப வசதிகள் தகவல் பரிமாற்றத்தை துரிதப்படுத்தி நிற்கின்றன.

எனினும் நாம் சுகம். உங்கள் சுகத்திற்கு இறைவன் துணைநிற்பாராக என்ற பண்புடைச் சொற்கள் இல்லாத தொடர்பாடல்களே சமகாலத்தில் அதிகம் எனலாம்.

எதுவாயினும் எழுதுதல் என்பது மிகப்பெரியதொரு பயிற்சி. உடலும் மூளையும் இயங்குவதற்கான ஒருமித்த செயற்பாடு.

எனினும் இன்றைய இளம் சமூகத்திடமும் மாணவர்களிடமும் எழுதுகின்ற ஆற்றல் என்பது கடுமையாகக் குறைந்துவருகின்றது என்ற உண்மைகளைச் சொல்லித்தானாக வேண்டும்.

கணனியில் தட்டச்சு செய்கின்ற வசதிகளும் போட்டோப் பிரதிகள் எடுக்கக்கூடிய வளங்களும் எழுதும் பயிற்சிக்குத் தடை விதித்துள்ளன என்பதே உண்மை.

எழுதுகின்ற செயற்பாடு மட்டுப்படுகின்றபோது வாசிப்பதென்பது குறையவே செய்யும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற சில துறை மாணவர்கள், பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றியுள்ள போட்டோக் கொப்பிக் கடைகளில் குவிந்து நிற்பதைக் காண முடியும். அந்தப் போட்டோக் கொப்பிக் கடைகளில் பல்லைக்கழக மாணவர்களுக்குத் தேவையான கட்டுரைகள், பட்டப்பின் டிப்ளோமா மற்றும் முதுமாணிப் பட்டங்களுக் குரிய கட்டுரைகள் போட்டோப் பிரதி செய்யப்பட்டு தொங்க விடப்பட்டுள்ளன.

மாணவர்கள் தாம் எழுத வேண்டிய ரியூட் என்ன என்பதைக் கூறினால் போதும் போட்டோக் கொப்பிகளை உரிமையாளர் உரிய தலைப்பிலான பிரதிகளை கொடுப்பார்.

அவற்றின் அடி நுனிகளை மாற்றியமைத்தால் போதும் என்பதே இன்றைய நிலை.

ஆக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வித்தியானந்தன் நூலகம் கண்ணீர் விட்டு அழுவதை உற்று நோக்கினால் கண்டறிய முடியும்.

அங்குள்ள ஆயிரக் கணக்கான புத்தகங்கள் மாணவர்களின் கைபடாமல் உள்ளன. பாரதிதாசனின் மொழியில் கூறுவதாயின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வித்தியானந்தன் நூலகத்தின் புத்தகங்களும் வேரில் பழுத்த பலாக்கள் தான் எனலாம்.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள போட்டோக் கொப்பிக் கடைகளில் தொங்குகின்ற புத்தகப்பிரதிகள் தான் பலருக்கு பட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையையும் நாம் சொல்லாமல் இருக்க முடியாது. ஆக வாசிப்பும் எழுத்தும் எங்களிடம் இருந்து மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருப்பது வேதனையான உண்மை.

இந்த உண்மையை உணர்ந்திருந்தும் நாம் பேசாதிருப்பது நியாயமாகாது.

இது தொடர்பில் சமூக அக்கறை கொண்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கடிதம் எழுதுதல், பதில் கொடுத்தல், பத்திரிகை மற்றும் புத்தகங்களை வாசித்தல் என்ற ஒழுங்கமைவானது ஒரு சமூக அக்கறையோடு இடம்பெறக்கூடியது.

எனினும் போர்க்காலத்தின் கொடூரங்களில் ஒன்று எங்களிடம் இருந்த சமூக அக்கறை தொலைந்து போனதுதான்.

எது நடந்தாலும் நமக்கென்ன என்றிருப்பது, அநீதியைத் தட்டிக் கேட்காமல் அமைதி காப்பது, நாம் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலத்தை மட்டுமே வளர்த்துக் கொள்வது என்ற சிறுமைத்தன வக்கிரங்கள் எங்கள் தமிழர் பண்பாட்டிற்கு பேரிடியாக அமைந்து விடுகின்றது.

எனவே அன்புக்குரிய சகோதரர்களே! இவ் விடத்தில் தொடரும் கடிதங்களுக்கு நீங்கள் நிச்சயம் பதில் எழுத வேண்டும் என்பது நம் பெரு விருப்பம்.

நீங்கள் எழுதுகின்ற பதில் கடிதங்கள் இவ் விடத்தில் பிரசுரிக்கப்படும் என்பதையும் கவனத்திற் கொள்க.

எனதருமைச் சகோதரர்களுக்கு என்ற விழிப்போடு கடிதம் அவ்வப்போது தொடரும்.



# காரைநகர் வாரிவளவு ஸ்ரீ
# பிரதிஷ்டா மஹா கும்பாபிஷே



**நல்லை ஆதீன குருமுதல்வரின் ஆசிச்செய்தி!**

விநாயகர் அடியார்களுக்கு...

காரைநகர் வாரிவளவு எனும் தலத்தில் கற்பக விநாயகனாக எழுந்தருளி அருளாசி புரியும் விநாயகப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு நடைபெறும் இவ் அபிஷேகம் இன்று நடைபெறுவதில் ஆலயத்திற்கும் ஊர் மக்களுக்கும் சிறப்பைத் தருவதாகும். நீர் வளமும் நில வளமும் இயற்கை அழகும் கொண்ட பிரதேசத்தில் வேண்டுவார் வேண்டுவதனை ஈயும் பொருட்டு அனைத்தையும் தருகின்ற கற்பக விநாயகனாக எழுந்தருளியுள்ளார்.

இவ்வாலயம் பல கட்டடக்கலைகளையும் கட்டட நிர்மாணங்களையும் நான்கு இராஜகோபுரங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பது இவ்வாலய தனித்துவமாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று வகையில் நிறைவான பல ஆலயம் கொண்ட ஆலயங்கள் காரைநகர் மண்ணின் ஈழத்து சிதம்பரம் அமைந்திருக்கும் சிறப்புடன் இவ்வாலயம் இவ்வூருக்கு மகுடமாக அமைந்துள்ளன. விநாயகர் வழிபாடில் வாக்கையும் மனதையும் மாமலரால் நோக்கையும் உடங்காத மேனியையும் தந்தருளும் இறைவனால் நான்கினை கொடுத்து மூன்று இன்பம் பெறும் வழிபாடு விநாயகருக்கு உரியது.

சாணம், மஞ்சள், சந்தனத்தில் எழுந்தருளும் இறைவனாவார். இவருடைய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று அமைதியும் சந்தோஷமும் பெற அனைவரும் விநாயகரை பிரார்த்திப்போமாக. இக் கும்பாபிஷேகம் செய்யும் சிவாச்சாரியாருக்கும் ஆலய அறங்காவலருக்கும் சைவ மக்களுக்கும் இறை இன்பம் கிடைப்பதாக.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம் நல்லை திருஞான சம்பந்த ஆதீனம்.**

**பிரிதிஷ்டா குருவின் ஆசியுரை**

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் மண் காரைநகர். நமது பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பேணுபவர்களாகவும் நமது சமயத்தை வளர்க்கத் தேவையான செல்வத்தைத் தேடுபவர்களாகவும் காரைநகர் மக்கள் இருக்கின்றனர்.

காரைநகரில் அருள்பொலிய அமைந்திருக்கும் பல்வேறு ஆலயங்களில் ஒன்றாகப் பெருமையுடன் விளங்குகிறது வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம். அவர் அருள் வழங்கும் சிறப்பை இரண்டு அடை மொழிகள் எடுத்துக் காட்டுகின்றன. வாரிவளவில் அமர்ந்து வாரி வழங்குகிறார். கற்பக விநாயகர் என்பதனால் கற்பக தருபோல அள்ளி வழங்குகிறார்.

அருட் பொலிவு மிக்க அவரது ஆலயம் இன்று அழகு பொலிவும் அற்புத ஆலயமாக சிற்ப- சித்திர வேலைப்பாடுகளுடன் கட்டியெழுப்பப்பட்டு புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

ஆலய நிர்வாகியின் இடையறாத முயற்சியாலும் ஊரவர்கள் யாவரினதும் கொடைச் சிறப்பினாலும் வெளிநாட்டு அன்பர்களின் பேராதரவாலும் ஆலயம் மிகச் சிறப்பாக அமைந்து விட்டது.

வேத, சிவாகம நெறி முறைகள் வழுவாது சிறப்பான கும்பாபிஷேகத்தை நடத்துவதற்காக ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் பல சிவாசாரியார்கள் கலந்து கொள்கின்றனர். தமிழகத்திலிருந்து வேத விற்பன்னர்களும் திருமுறை வல்லாரும் வருகின்றனர்.

எல்லா வகையிலும் மிக உன்னதமதாக நிகழும் இந்த மஹா கும்பாபிஷேகத்தின் மூலமாக எம்பெருமான் கற்பக விநாயகர் திருவருட் பொலிவுபெற்று அடியார்களுக்கு அருளை வாரி வழங்கி மங்கல வாழ்வு அனைவருக்கும் கிட்ட வேண்டுமென ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்**
**நா.பாலஸ்கந்தரூப குருக்கள்**
**பிரதிஷ்டா பிரதமகுரு.**



**சின்மயாமிஷன் சுவாமிகளின் ஆசிச் செய்தி**

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் தைத்திங்கள் 29 ஆம் நாள் (12.02.2016) வெள்ளிக்கிழமை நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்திலே சிற்பங்களும் வர்ண வேலைகளும் சித்திரங்களும் நிறைந்து அழகு பொலியும் வகையிலும் சைவசமயக் களஞ்சியம் போலப் பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தி நிற்பதும் பசுமை நிறைந்த பூங்கா சூழ்ந்திருப்பதுமாகப் புதுப்பித்து அமைக்கப்பெற்ற ஸ்ரீ கற்பக விநாயகருக்கும் பரிவார மூர்த் திகளுக்கும் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் சிறப்புக்குரியது.

100 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்ற இவ் ஆலயம், ஒரு இந்து ஆலயம் எவ்வாறு திகழ வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக விளங்குவதும் நேர்த்தியான, தூரநோக்கான, கட்டுப்பாட்டுடன் கூடிய நிர்வாகத்தின் கீழ் வழிநடத்தப்படுவதும் பெருமையான விடயங்களாகும்.

அருளை வாரி வழங்கும் ஸ்ரீ கற்பக விநாயக பெருமானுக்கு சிறப்பான முறையில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானத்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க இறை**
**இறைபணியில் பிரம்மச்சாரி ஜாக்கிர சைதன்ய சுவாமிகள், வதிவிட ஆச்சாரியார், சின்மையா மிஷன் யாழ்ப்பாணம்.**



**வேண்டிய வரங்களை வாரி வழங்கும் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்**

யாழ்ப்பாணத்தின் சிகரம் காரைநகரின் மேற்குப்புறத்தில் வாரிவளவு என்னும் குறிச்சியில் கும்பரைப்புலத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ கற்பக விநாயகருக்கு 12.02.2016 அன்று கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. 1916 ஆம் ஆண்டு சுப்புடையார் பரம்பரையில் வந்த அன்பர் ஒருவரினால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் 1916 ஆம் ஆண்டு சுப்புடையார் பரம்பரையில் வந்த இராமநாதர் தம்பையா என்பவர் சுண்ணாம்பு கற்களால் ஆலயம் அமைத்து உத்தரகோச மங்கைகையிலிருந்து வந்த மங்களேஸ்வரக் குருக்கள் பரம்பரையில் வந்த சிவஸ்ரீ ச.சோமசுந்தர ஐயரை பூசகராக நியமித்து மஹாகும்பாபிஷேகம் செய்வித்து வழிபடலாயினர். காலப் போக்கில் தமிழ் புத்தண்டு தினமான சித்திரைப்புத்தாண்டு சித்திரை மாதப் பிறப்பில் அன்று எம்பிரானுக்கு தேர்த்திருவிழா நடைபெறத்தக்கதாக மஹோற்சவமும் செய்ததோடு பிள்ளையார் கதை இருபத்தொருநாள், திருவெம்பாவை காலத்தில் பத்து நாட்களும் காலைப் பூசையில் திருவெம்பாவை ஓதல் நடைபெற்று பத்தாம்நாள் காலையில் விநாயகப்பெருமான் வீதியுலாவும் இன்றுவரை நடந்து வருகின்றன.

அமரர் தம்பையாவிற்கு பின்னர் அவரது மகன் கணேசபிள்ளை அவர்கள் 1969 ஆம் ஆண்டு அமரத்துவம் அடையும்வரை இவ்வாலயத்தினை செவ்வனே நிர்வகித்து வந்தார். இவரது காலத்திலேயே சுண்ணாம்புக் கட்டடம் யாவும் சீமெந்தினால் கட்டப்பட்டன. 1969 ஆம் ஆண்டு கணேசபிள்ளையின் இறப்பிற்கு பின்னர் அவரது மனைவி திருமதி க.பரமேஸ்வரியும் அவரது மூன்று ஆண் பிள்ளைளும் தமது இயல்புக்கு ஏற்ப ஆலயத்தினை பராமரித்து வந்தனர். காலப்போக்கில் க.பரமேஸ்வரியின் சுகவீனம் காரணமாக 1972 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15 ஆம் திகதி மூன்று பேர் கொண்ட நிர்வாகசபையில் திருவாளர்கள் ஈ.வி.கார்த்திகேசு, க.கணபதிப்பிள்ளை, சி.சிவஞானம் ஆகியோரிடம் ஆலய நிர்வாகத்தினை ஒப்படைத்தனர். இவ்வாறு ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப்பட்ட சில மாதங்களிலேயே முதலிருவரும் மூன்றாவதுநபரான சி.சிவஞானத்திடம் ஒப்படைத்து அவர்கள் அமரத்துவம் அடையும் வரை ஆலய நிர்வாகத்திற்கு பல வழியிலும் ஒத்துழைப்பு நல்கினர்.

அமரர் சிதம்பரப்பிள்ளையின் கனவு நனவாகியதுபோல் 1981 ஆம் ஆண்டு கோபுர மேல் வேலைகள் அனைத்தும் நிறைவடைந்து காரைநகரில் முதல் கோபுரம் அமைந்த பெருமையுடன் 31.01.1982 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1991 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக 1997 ஆம் ஆண்டுவரை பூசை வழிபாடுகள் தடைப்பட்டிருந்தாலும் இங்கிருந்த அடியவர்கள் பொங்கல் பொங்கி படைத்து வழிபாடாற்றினர். 1997 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய மஹோற்

விளம்பர அனுசரணையாளர்கள்

Kajamugan Hardware
147,149, Stanly Road, Jaffna. 021 222 2833, 021 222 71

# மன்னாரில் உயிராபத்தை விளைவிக்கும் மதம் பிடித்த யானைகள் தொல்லை

## கட்டுப்படுத்த வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறையில் தென்னிலங்கை வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் விடப்பட்ட மதம் பிடித்த யானைகளே தற்போது மக்களுக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்தி வருவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 45 ஆவது அமர்வு அண்மையில் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி அமர்வின் போது வவுனியா வடக்கு பிரதேசம் உட்பட வவுனியா மற்றும் ஏனைய இடங்களில் தென்னிலங்கையிலிருந்து கொணடு வரப்பட்ட யானைகளை கட்டுப்படுத்த வன ஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது.

இப்பிரேரனை மீதான விவாதத்தின் போதே விந்தன் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். தென்னிலங்கையில் மதம் பிடித்த யானைகளைபிடித்துகொண்டு வந்து மன்னார் சிலாவத்துறையில் தென்னிலங்கை வனஜீவராசிகள் திணைக்களத்தால் விடப்பட்டன. இந்த யானைகளே தற்போது அங்குள்ள மக்களுக்கு ஆபத்தை விளைவித்து வருகின்றன என விந்தன் சுட்டிக்காட்டினார்.


மேலும் ஒட்டுசுட்டான், துணுக்காய் உட்பட பல இடங்களிலும் இந்த யானைகளின் தொல்லை காணப்படுகின்றது. இந்த யானைகள் பிரதேச வாசிகளுககு உயிர் ஆபத்தை விளைவிப்பதோடு அவர்களுடைய பயிர்வகைகளுக்கும் நாசம் விளைவித்து வருகின்றது. இதனால மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் கூறினார்.

யாழ்.மாவட்டம் தவிர்ந்த வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது. எனவே லிங்கநாதன் முன்மொழிந்த இந்த பிரேரணையை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு விரிபுபடுத்தி நிறைவேற்றுமாறு உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்தின் அனைத்து இடங்களிலும் குரங்குகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது. ஆகையால் இவற்றை கட்டுப்படுத்த நாட்டு துப்பாக்கிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கூறினார்.

உங்களுக்கு நாட்டு துப்பாக்கியை தந்தால் நீங்கள் வடக்கு மாகாண சபைக்கு துப்பாக்கியை கொண்டு வந்து விடுவீர்கள் என உறுப்பினர் சயந்தன் நக்கலுடன் கூறினார். (2-3-4)

# காதலியார் சம்மளங்குளம் கிராம குறைகேள் சந்திப்பு



கடந்த சனிக்கிழமை அடிப்படை வசதிக்குறைபாட்டுடன் உள்ள முல்லை காதலியார் சம்மளங்குளம் கிராமத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் மயூரனின் தலைமையில் நடைபெற்ற இம் மக்கள் குறைகேள் சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் தம் கிராமத்தில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருக்கும் பல்வேறு அடிப்படைக்குறைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இது தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

225 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் பயிர்ச்செய்கை செய்துவரும் விவசாயிகளுக்கும் அதன் பயனாளிகளுக்கும் குருவிச்சை நாச்சியார் ஆற்றின் சிறிய பாலம் அமைக்கப்படவேண்டியது அவசியமாகும். சம்மளங்குளம் பயனபாட்டில் இருந்தாலும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும்விவசாயிகளின்தேவைகளை விவசாய அமைசசிற்கு கொண்டு செல்வேன்.

மேலும் உள்வீதிகள் தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளும் படியும் உயர்தர, சாதாரண தரங்களில் கற்கும் ஐந்து மாணவர்களுக்கு மிதிவண்டிகளும் பாடசாலைக்கான ஒலிபெருக்கி சாதனமும் இவ் வருடத்திற்கான நிதியொதுக்கீட்டில் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

கிராமத்தின் வீதிகள், பாடசாலை மற்றும் குருவிச்சை நாச்சியார் ஆற்றின் பாலம் ஆகிய இடங்களையும் ரவிகரன் மக்கள் பிரதிநிதிகளுடன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். (3-281)

# நெடுங்கேணி வைத்தியசாலைக்கு நிரந்தர அம்புலன்ஸ் வண்டி இல்லை

வவுனியா, நெடுங்கேணி வைத்தியசாலையில் நிரந்தரமாக நோயாளர் காவு வண்டி இன்மையால் அவசர நோயாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா, நெடுங் கேணி வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்ட நோயாளர் காவு வண்டி கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையிலுள்ளது.

இத னால் புளியங்குளம் வைத்தியசாலையில் உள்ள நோயாளர் காவு வண்டியே நெடுங்கேணி அவசர நோயாளர்களையும் ஏற்ற வேண்டியுள்ளது.

புளியங்குளம் வைத்தியசாலையில் உள்ள நோயாளர் காவு வண்டியே பால மோட்டை, ஓமந்தை ஆகிய வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்களையும் ஏற்றுவதால் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்கள் வருகின்ற போது உடனடியாக இந் நோயாளர் காவு வண்டி வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட நோயாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-3-250)



மன்னார் மாவட்டத்தின் இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் போன்றவற்றை புனரமைக்க, வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தனது பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து கடந்த ஆண்டு நிதி ஒதுக்கியிருந்தார். கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் மற்றும் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் இணைந்த குழுவினர் அதற்கான காசோலைகளை வழங்கி வைத்தனர். (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தமிழர்கள் என்பதால் இந்த நிலையா? ஒதியமலை மக்களின் அவலநிலை பாரீர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒதியமலை கிராம சேவையாளர் பிரிவு மக்கள் துன்பங்களை அனுபவித்து வருவதாக அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்

1982 ஆம் ஆண்டு 150 மாணவர்களுடன்இயங்கிய மு/ஒதியமலை அ.த.க. பாடசாலை தற்போது ஐந்து மாணவர்களுடன் கற்றலுக்கான சூழல் இல்லாத நிலையில் இயங்குகிறது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கும் போது எமது பகுதியில் இடப்பெயர்வுக்கு முன் 110 குடும்பங்கள் வசித்து வந்தன. 1984 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் ஒதியமலை படுகொலை நடத்தப்பட்டதாலும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாததாலும் இடம் பெற்ற இன அழிப்பு அச்சம் காரணமாகவும் மக்கள் வேறு இடங்களில் குடியேறி வருகின்றனர்.

இங்கு வருகின்ற கிராம சேவையாளர்கள் அவர்களுக்கான பதிவுகளைமாற்றி கொடுக்கிறார்கள். பாடசாலை அதிபர் மாணவர்களை வேறு இடத்துக்கு செல்ல அனுமதியளிக்கிறார். இவ்வாறு எமது அதிகாரிகளும் எமது பிரதேசத்தில் யாருமில்லாத இடமாக மாற்றி இந்த நிலங்களையும் சிங்கள மக்கள் கைப்பற்ற மறைமுகமாக உதவி செய்கிறார்களா என எண்ணத்தோன்றுகிறது. தற்போது 50 குடும்பங்களே இங்கு வசிக்கின்றன.

எமது கிராமத்திற்கான அடிப்படை வசதிகள் சரிவர ஏற படுத்திதரப்படவில்லை. ஆனால் இதிலிருந்துஒன்றரை கிலோ மீறறர் தூரத்திலுள்ள சிங்கள கிராமமாகியுள்ள எமது கிராமத்தில் மின்சாரம் அனைவருக்கும் வழங்கப்பட்டு வீதிகள் காப்பற இடப்பட்டுகாட்டு யானைகள் அந்த இடத்துக்கு செல்லாது மின்சார வேலிகளும் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. நாங்கள் தமிழர்கள் என்பதால் இந்த நிலையா? எதற்காக இவ்வாறு செய்கிறார்கள் என கிராமவாசி கேள்வி எழுப்பினார்.

இந்தப்பகுதியில் நல்ல விளைச்சல் தரும் வயல் நிலங்கள் காணப்படுகின்றன தணிக்கல் கிராமத்திலிருந்த மக்கள் இப்போது அந்த இடத்தில் குடியேறவில்லை. 1984 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அந்த துயரச்சம்பவம் காரணமாக அங்கு தற்போது யாருமில்லை. அங்கு தற்போது விவசாயம் மேற்கொள்வதற்காக மட்டும் அப்பகுதிக்கு செனறு வருகின்றனர்.

இதைவிட பலஏக்கர் காணிகளை வனவள பாதுகாப்பு திணைக்களம் கைப்பற்றியுள்ளது. இவ்வாறு தம்மை எவ்வாறெல்லாம் துன்பப்படுத்தி எம்மைவெளியேற்றி இந்த இடத்தையும் சிங்களவர் களுக்கு வழங்கி எம்மை நிர்க்கதிக்குள்ளாக்கும் நடவடிக்கைக்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (3-281)

# மாங்குளம் பொதுச்சந்தை திங்களன்று திறப்பு

ஏ-9 வீதி மாங்குளத்தில் 60 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுச்சந்தை எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி சந்தையில் மரக்கறி,பழங்கள், மீன், தேங்காய், கோவில் பொருட்கள் என்பன விற்பனைசெய்யப்படவுள்ளன. மேற்படி பொருட்களை விற்பனை செய்ய கடைகளைப் பெற விரும்புவோர் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒலுமடு உப அலுவலகத்தில் பதிவு களை மேற்கொள்ள முடியுமென புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் குமாரசாமி மிதுலைநாதன் அறிவித்துள்ளார். (2-3-15)




# மடு பிரதேச கலாசார விழாவும் மடுக்கீற்று மலர் வெளியீடும்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மடு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மடு பிரதேச கலாசார விழாவும் மடுக்கீற்று மலர் வெளியீட்டு நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மன் /தட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதான நிகழ்வாக மடு பிரதேசத்தின் வரலாறு, பண்பாட்டு ஆகியவற்றை ஆவணப்படுத்தும் முகமாக வெளியிடப்படுகின்ற "மடுக்கீற்று - 2015" இதழ் வெளியீடும், பிரதேச கலை, இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபட்ட கலைஞர்கள், எழுத்தாளர் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது. அந்தவகையில் கல்மடு கிராமத்தைச் சேர்ந்த நாடக நெறியாளரும் 2015 ஆம் ஆண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் விருதைப் பெற்றுக்கொண்ட வருமான செ.மாதவன், மளுவராயர்கட்டையடம்பனைச் சேர்ந்த வாசாப்பு அணணாவியார் அ.முடியப்பு, முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த கவிஞரும் எழுத்தாளருமான இ. புக்கோவசோர் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மடு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ். தேசப்பிரிய கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

இந் நிகழ்வில் வரவேற்புரையை மடு கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜன், மடுக்கீற்று நூல் அறிமுக உரையை புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், நன்றியுரையினை மடு பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.ஜே.எம். அனிதா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இந்நிகழ்வின் விசேட கலை நிகழ்வுகளாக ஆண்டான்குளம் றோ.க.த.க பாடசாலை மாணவர்களின் இன்னிய ஆற்றுகையும், மன்/துட்சணா மருதமடு அ.த.க பாடசாலை மாணவர்களின் வர வேற்பு நடனம், கிராமிய நடனம், பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மாணவர்களின் நடனம், தம்பனைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கலா மன்றத்தினரின வேப்பிலை நடனம், கரகாட்டம் ஆகியனவும், செம்முகம் கலைக் குழுவினரின் வேடமுக ஆட்டம், காக்கையன் குளம் முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களின் இஸ்லாமிய கீதம், நாடகம் என்பனவும் இடம் பெறவுள்ளன. (2)

# நெற்பயிர்ச்செய்கையில் விரைவாக பரவிவரும் எரிபந்த நோய் தாக்கம்

## விவசாயிகளை விழிப்பாக இருக்குமாறு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்து

வவுனியா மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கையில் விரைவாக பரவி வரும் எரிபந்த நோய தொடர்பாக விவசாயிகளை விழிப்பாக இருக்குமாறு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**வவுனியாவில் விரைவாகநெல்வயலில் பரவி வரும் எரிபந்தம்**

வவுனியா மாவட்டத்தில் இரவு நேரங்களில் தற் போதுள்ள பனியான காலநிலை காரணமாக எரிபந்தம் எனப்படும் பங்கஷ் நோய் விரைவாக பரவி வருகின்றது.

இப் பங்கஷ் வித்திகள் விரைவாக பரவிநெல் விளைச்சலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நெற தாவரத்தின் எந்தவொரு வளர்ச்சிப் பருவத்திலும் ஏற்படக்கூடியது.

**அறிகுறி**

இப்பங்கசு இலையின் மேற்பரப்பு ,தண்டின் கணுக்கள்,கதிர்கள் அல்லது தானியங்களின் மீது புள்ளிகளை உருவாக்கும். இப்பங்கசுவினால் இலையின் மீது ஏற்படும் புள்ளிகள் மிகத் தெளிவானவை ஆகும்.இப் புள்ளிகளின் நடுப்பகுதி வீங்கியும், முனைகள் ஒடுங் கியும் காணப்படும். இவை இலைகளில் பரந்துபட்டு காணபடும். பெரிதாகிய புள்ளியின் மத்திய பாகம் பொதுவாக நரை நிறமானதாக காணப்படும். மேலும் நெல் வர்க்கத்தின் எதிர்ப்புத்தன்மைக்கு ஏற்ப இலைகளின் மீது தோனறும் இப்புள்ளிகளின் பருமனும் மாறுபடலாம். மேட்டு நிலவயல்களில் சகித்து வளராத நெல் வர்க்கங்களை பயிரிடும் போது எரிபந்தத்தினால பெரும் எண்ணிக்கையான நாற்றுக்கள் இறந்து விடும்.

எரிபந்தம் பங்கஷ் தண்டின் கணுக்களில் தொற்றும் போது அவ்விடம் கறுப்பு நிறமாகி தண்டு அவ்விடத்தில் முறிந்து விழும்.இலை மடலின் சோணை கறுப்பு நிறமாகி அழுகி இலகுவில் முறியும். கதிரின் கழுத்துப் பகுதியில் இப் பங்கஷ் தொற்றும் போது அது கறுப்பு நிறமாகி முறிந்து விழும். இது கழுத்தழுகல் (Neck rot)எனப்படும். இதனால் நிரம்பும் தானியங்களுக்குப் போசனைகள் கிடைக்காமையால் பதர்கள் உருவாகும். சில சந்தர்ப்பங்களில் கதிரில் சில பாகங்கள் மாத்திரமே இப் பங்கசுவினால் பாதிக்கப் படும். இவ்வாறான சந்தர்ப்பங் களில் கதிரில் அவ்விடாங் களில் உள்ள தானியங்கள் மாத்திரம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிரம் பாதுபதராகும்.

வயலினை அடிக்கடி சுற்றிப பார்வையிடுவதன் மூலம் இந் நோயை இனங்காண லாம்

**இந் நோய் வரமுன் தடுக்கும் வழிகள்**

ஆழ உழுவதன் முலம் தாவர மீதிகளை புதைத்து விடல்,ஒரு இன நெல்லில் இன் நோய் ஏற்படும் போது வேறு இன நெல்லை பயிரி டல்,தரமான விதை நெல்லை பயன்படுத்தல், எதிர்ப்பின நெல் வர்க்கங் களை பயிரிடல்

Bg-366,Bg-359, Bg- 352பருவத்தில் பயிர் செய்தல்

சரியான விதையளவை பயன்படுத்தல்

| தானியவகை | வீச்சு விதைப்ப | நாற்று நடுகை | பரசூட் |
|---|---|---|---|
| நீண்ட தானியவகை | 127kg/ஹெக்டர் | 50kg/ஹெக்டர் | 25-30kg/ஹெக்டர் |
| குறுகிய தானிய வகை | 102kg/ஹெக்டர் | 50kg/ஹெக்டர் | 20-25kg/ஹெக்டர் |

கருக்கப்பட்ட உமியினை இடல்,நைதரசன் பசளை களை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் இடுவதுடன் பல தடவைகள் பிரித்திடல், சிறந்த களைக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளல்

**கட்டுப்பாட்டுமுறை**

நோய் வந்தபின் கட்டுப்படுத்த பின்வரும் பங்கசு நாசினிகளை விசிறவும்

| பங்கசு நாசினியின் இரசாயன பெயர் | ஹெக்டேயருக்கு தேவையான அளவு |
|---|---|
| ரிபியுகொனசோல் (Tebuconazole)250g/IEW | 192-240ml/ha |
| ஜசோபுறத்தியோலன்(Isoprothiolane) 400g/IEC | 400-500ml/ha |
| காபண்டசிம்(Carbendazim) 50%Wp/WG | 224-280g/ha |

# வவு.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக திரேஸ்குமார் நியமனம்

வவுனியாமாவட்டமேலதிக அரசாங்க அதிபராக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருச்செல்வம் திரேஸகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டு நேற்றைய தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஏற்கனவே வவுனியா மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய சரஸ்வதி மேகநாதனுக்கு பதிலாக தற்போது திரேஸ் குமார் நியமிக்கப்பட்டுளளார்.

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த திரேஸ்குமார் கடந்த 2004 - 2011 வரையிலான காலப்பகுதியில் மடு பிரதேச செயலாளராகவும், கடந்த 2011 - 2013 ஆம் ஆண்டு வரை ஒட்டு சுட்டான் பிரதேச செயலாளராகவும் பணியாற்றியிருந்தார்.

அத்தோடு, கடந்த 2014 - 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராகப் பணி புரிந்தமை குறிப்பிடத்தக்கது.(2-281)



வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் 9மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட முழங்காவில் பேருந்து நிலையம் மக்கள் பாவனைக்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டபோது...

(படம்:-பொ.சோபிகா,பனிக்கன்குளம் செய்தியாளர்)




# மாசார் அ.த.க.பாடசாலைக்கு 5 ஏக்கர் காணி அன்பளிப்பு

(பளை)

கிளி/மாசார் அ.த.க. பாடசாலைக்கு நலன் விரும்பி ஒருவரால் 5ஏக்கர் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நலன் விரும்பி ஒருவரால் வழங்கப்பட்டுள்ள மேற்படி காணியின் 3 ஏக்கர் நிலப் பரப்பில் தென்னங்கன்றுகளை நாட்டுவதற்கு தாம் உதவிகள் வழங்குவதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி காணியின் 2 ஏக்கர் நிலப் பரப்பு பாடசாலையின் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி தயாநிதி கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில். பளைக்கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஐ.குகான்ந்தராஜா, கௌரவவிருந்தினராகசெ.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (3-291)

# மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வு சங்க வளர்ச்சிக்கு வடக்கு மாகாணசபை நிதியுதவி

மன்னார் மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கத்தின் வளர்ச்சிக்காக வடக்கு மாகாண சபை நிதியுதவி வழங்கியுள்ளது.

சமூக சேவைகள் அமைசசின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியை வடக்கு மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.பிரிமூஸ் சிறாய்வா நேற்று முன்தினம் மாலை வழங்கி வைத்தார்.

மன்னார் மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கத்தின் பணிப்பாளர் அருட் சகோதரி சோசப்பின் டிமேல் நிதிக்கான காசோலையை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில், சமூக சேவை உத்தியோகததர் எம்.எஸ். சந்திரபோஸ், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜே. ஒஸ்மன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# விண்ணப்பம் கோரல்

சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் கீழுள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக் களத்தினால் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம சாராசேவைவகுதி-II சேவைத் தொகுதியின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்புச் செய்வதற்கான விண்ணப்பத் திகதியும் வயதெல்லையும் நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் மேலும் அறிவித்துள்ளார்.

இம் மாதம் 3ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிககப்பட்டிருந்த மேற்படி பதவிக்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் 18-30வயதிற்குட்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த விண்ணப்ப வயதெல்லையும் 18-35 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஏனைய தகைமைகள் யாவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு அமையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலக் பிரிவுக்குட்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கனவே குறைவாகக் கிடைக்கப் பெற்றுள்ளதால் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாய்ப்பினைத் தவறவிட்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (3-15)

# துணுக்காய் பிரதேச செயலக நடமாடும் சேவை இன்று

(மல்லாவி)

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் அனுசரணையுடன் துணுக்காய் பிரதேச செயலக மட்டத்திலான நடமாடும் சேவையொன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பி.ப. 4மணிவரை மல்லாவி நகரப்பகுதியிலுள்ள அனிஞ்சியன் குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்.

துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவுக்கு உட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள மக்கள் பயனடையும் வகையில் இந் நடமாடும் சேவை ஒன்று நடைபெறவுள்ளது.இந் நடமாடும் சேவையில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்,காலம் கடந்த திருமண, பிறப்பு, இறப்பு பதிவுகள், பொலிஸ் பதிவுகள், உத்தேச வயதுச்சான்றிதழ்,தேசிய ஆள் அடையாள அட்டைக்கான விண்ணப்பம் கையளித்தல் உட்பட அனைத்து சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பாக பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் இல்லாதவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர்ப் பதிவு இருந்தால் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளும் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளதால் தேசிய ஆள் அடையாள அட்டை இல்லாத அனைத்து மக்களும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-15)

# மாதிரி ஆரம்ப பாடசாலை உருவாக்கல் திட்டத்தின் கீழ் 6 பாடசாலைகள் தெரிவு

## துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒரு பிரதேச செயலகத்தில் இருந்து 2பாடசாலைகளைத் தெரிவு செய்து மாதிரி ஆரம்பப் பாடசாலை உருவாக்குதல் திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நவீன முறையிலான கற்றல் வளங்களைக் கொண்டுள்ளதாகவும் போதிய பெளதீக வளத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து மு/மயில் வாகனம் ஆரம்ப வித்தியாலயம்,மு/அனிஞ்சியன் குளம் அ.த.க.வித்தியாலயம்,மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து மு/பாண்டியன் குளம் ஆரம்ப வித்தியாலயம், மு/குமாரசாமி ஆரம்ப வித்தியாலயம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலிருந்து மு/சண்முகரட்ணம் வித்தியாலயம், மு/ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம் ஆகிய 6 பாடசாலைகளுமே மாதிரி ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்குதல் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார். (2-3-15)

# 70 குடும்பங்களுக்கு பளையில் காணிகள்


(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணியின் முயற்சியினால் சுமார் 70 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

குடியிருப்பதற்கு காணிகள் அற்றிருந்த மேற்படி குடும்பங்களுக்கு பளை வண்ணாங்கேணி வடக்கு தம்பகாமத்திலுள்ள அரச காணியிலிருந்து தலா ஒரு குடும்பத் துக்கு அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங் கப்பட்டுள்ளன.

மேற்படி குடும்பங்கள்பளை மணியந்தோட்டத்தில் தற்காலிகமாக வசித்து வந்தன.

தற்போது வழங்கப்பட்டுள்ள காணிகளில் தற்காலிக வீடு அமைப்பதற்கு முதற்கட்டமாக 4ஆயிரத்து 700ரூபா வழங்கப்பட்டுள்ளது.(3-291)



மு/முத்து விநாயகர் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்ற போது...

(படம்:-மல்லாவி செய்தியாளர்)

# எமக்கு விசேட நீதிமன்றத்தில் எந்த நம்பிக்கையும் இல்லை

## அரசியல் கைதிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு )

**எமக்கு விசேட நீதிமன்றத்தில் எந்த நம்பிகையும் இல்லை. எமது விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வடமாகாண சபையும் இணைந்து நல்லாட்சி அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்து எமது விடுதலையை துரிதப்படுத்துமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளுக்கான விசேட நீதிமன்றத்தில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விசாரணையை துரிதப்படுத்துவதாக கூறிய அரசாங்கம் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையையும் இந்த நல்லாட்சி அரசாங்கம் எடுக்கவில்லை.

நேற்று முன்தினம் 14 தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது நீதவான் இவர்களின் விடுதலை: சம்பந்தமான அறிவித்தல் எதுவும் சட்டமா அதிபரிடம் இருந்து வரவில்லை என கூறி அவர்களது வழக்கு விசாரணை 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை திருகோணமலையிலும், வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நீதிமன்றம் ஊடாக விடுதலை செய்யும் போது ஏன் கொழும்பு நீதிமன்றத்தில் மட்டும் எமக்கான நீதி மறுக்கப்படுகிறது.

இது திட்டமிட்ட இனப் பழிவாங்கலா? இல்லாவிடின நீதி, தமிழன் என்ற ஒரே காரணத்தால் மறுக்கப்படுகிறதா? தமிழ் அரசியல் கைதிகளான நாமும், மக்களும் ஆச்சரியத்தில் உள்ளோம்.

எனவே இந்த விசேட நீதிமன்றத்தில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. எம்மை விடுதலை செய்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் அரசியல் கைதிகள் ஆகிய நாம் உருக்கமாக கேட்டுக் கொள்கின்றோம்.

எமது விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வட மாகாண சபையும் இணைந்து நல்லாட்சி அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்து எமது விடுதலையை துரிதப்படுத்தும் பட்சத்தில் தான் எமது மக்களுக்கான நல்லெண்ணத்தை அப்போது தான் உறுதிப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)



வடமராட்சி வலயக்கல்வி அலுவலக மேல் மாடி கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் கலந்து கொண்டு கட்டடத்திற்கான நுழைவாயிலின் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான நிதியிலிருந்து இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# அபிவிருத்திநிதி வங்கிகளில் முடங்குவதை தவிர்க்கவேண்டும்-தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபையின் நிதி எவ்வித அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படாமல் வங்கிகளில் நிலையான வைப்பில் இருப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

அந்த நிதி வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து உள் வீதிகளையும் திருத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 45 ஆவது அமர்வு கடந்த இரு நாட்களுககு முன்னர கைதடியில் அமைநதுள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூர் வீதிகள் பல ஆண்டுகளாக திருத்தப்படாமல் உள்ளதால் .அதற்கான நிதியினை உள்ளூராட்சி அமைச்சு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்டம் மட்டுமல்ல வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து உள் வீதிகளும் இதே நிலையில் தான் உள்ளன என சக உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வடக்கு மாகாண சபையிடம் இருக்கும் நிதியிலும் பார்க்க உள்ளூராட்சி சபைகளிடம் அதிகளவு நிதி உள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

பிரதேச சபைகளின் வங்கிக்கணக்குகளில் நிரந்தர வைப்பில் உள்ள பணத்தினை மீளப் பெற்று அபிவிருத்திக்கு செலவிட வேண்டும். இந்த பணத்தினை வடக்கு மாகாணத்தில் உள்ள உள் வீதிகள் திருத்தப்படுவதற்கு செலவிடப்பட வேண்டும் என்ற உத்தரவை வடக்கு மாகாண முதலமைச்சர் வெளியிட வேண்டும் என பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் கோரினார்.

வீதி அபிவிருத்திக்கு முன்னதாக வடிகால்கள் திருத்தப்பட வேண்டும். இவ்வடிகால்கள் திருத்தப்பட்டால் தான் புனரமைக்கப்படும் வீதிகள் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் என உறுப்பினர் சாள்ஸ்ூம், வன்னியில் உள்ள வீதிகளினால் பயணிப் போருக்கு புற்று நோய் ஏற்பட வாய்ப்புண்டு, அந்தளவிற்கு தூசு பறக்கின்றது. கரைச்சி பிரதேச சபையில் மட்டும் ஆறு கோடி ரூபா நிதி நிரந்தர வைப்பில் உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு பிரதேச சபைகளிலும் நிதி நிரந்தர வைப்பில் உள்ளது. இந்த நிதி மக்களிடம் இருந்து வரிப்பணம் மூலம் பெற்றுக் கொண்டதே. ஆகையால் அந்த நிதி மக்களுடைய அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என உறுப்பினர் பசுபதிப்பிள்ளையும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வன்னிப் பகுதிகளில் உள்ள பல வீதிகள் நூறு வருடங்களுக்கு மேலாகவும் திருத்தப்படாமல் உள்ளன. வீதிகள் திருத்தப்படும் போது வன்னியில் உள்ள வீதிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அம்மக்கள் போரினாலும் எல்லாவற்றாலும் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டுள்ளார்கள். வீதியினையாவது திருத்தி கொடுங்கள் எனவும் உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (இ-4)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதா்னத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கலட்டி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் நாகசிவசிதம்பரம்,கோண்டாவில் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி ரேவதி சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக கோண்டாவில் பிரபல நாதஸ்வரக் கலைஞர் திருமதி ஜே.சிவதாஸ் தம்பதியினர் கலந்து கொள்வர். (இ-5)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ்.நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக LB Finance யாழ். கிளையின் முகாமையாளர் இ.ரவிராஜ் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியரும் பாடசாலையின் பழைய மாணவருமான பா.சசிகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-136)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மா்காண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக மனையியல் பாட ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ்.கோப்பாய் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுவுள்ளது.

அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ். சண்முகவடிவேல் , யாழ். கல்வி வலய கணித பாட ஆசிரிய ஆலோசகர் இ.எவ்.ஆர். ஜெயக்குமார், ஜனசக்தி காப்புறுதி நிறுவன சுன்னாகம் கிளை முகாமையாளர் ஏ.ரஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினராக நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.பா.செல்வவேந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-5)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பி.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கல்லூரியின்பழைய மாணவரும் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ அதிகாரியுமான டாக்டர் ரி.செந்தவரன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக பழைய மாணவர் டாக்டர் எஸ்.சக்திவேல் (அமெரிக்கா) கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கி வைப்பார். (இ-5)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ்.புற்றளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# புதிய பயோமெற்றிக் அடையாள அட்டையில் தொழில் பற்றிய விபரம் உள்ளடக்கப்படாது

புதிதாக அறிமுகம் செய்யபடவுள்ள பயோமெற்றிக் அடையாள அட்டையில் தொழில பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்படாது என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய தேசிய அடையாள அட்டையில் தொழில். பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் புதிய பயோமெற்றிக் அடையாள அட்டையில் 'இந்த விபரங்கள் உள்ளடக்கப்படாது என உள் விவகார மற்றும் கலாசார அமைச்சர் எஸ்.பி. நாவீன்ன நாடாளுமன்றில் நேற்று முனதினம் தெரிவித்துள்ளார்.


பயோமெற்றிக் அடையாள அட்டையில் இரத்தத்தின் ரகம் மற்றும் கைவிரல் அடையாளம் போன்ற விடயங்களும்உள்ளடக்க்ப்படஉளளன.

இந்த விடயங்கள் உள்ளடக்கப்படுவது குறித்த சட்ட திருத்தம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நிறைவேறப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், பயோமெற்றிக் டிஜிட்டல் அடையாள அட்டையில் தொழில் என்ற பகுதி நீக்கப்படுவதனை அரச ஊழியர்கள் எதிர்ப்பதாக சிங்கள இணையதளமொன்று சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு

## பந்துல கவலை



நாடு தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் அரசாங்கம் 8.2 பில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டியுள்ள போதிலும், அரசாங்கத்தின் இருப்பில் தற்போது 5.2 பில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இரகசிய முதலீட்டாளர்களை நாட்டிற்கு கொண்டு வரவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சர்வதேச ஊடக நிறுவனமொன்றிற்கு தெரிவித்துள்ளதை பாராளுமன்ற உறுப்பினர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (இ)

## கவிதைத் தூறல்கள் நூல் வெளியீடு நாளை

சுபாவின் படைப்பான கவித் தூறல்கள் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்லமுத்து வெளியீட்டக இயக்குநர் யோ.புரட்சி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக பீட முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை பிரதி அதிபர் திருமதி இராஜலட்சுமி இராஜசேகரம் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக சங்கானை சைவப் பிரகாச வித்தியாலய ஆசிரியை திருமதி அனுஷா ஈஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# செய்தித் துளிகள்

## சட்டவிரோதமான 25 சிங்கக் கொடிகளை கருவாத்தோட்டம் பொலிஸார் கண்டெடுப்பு

கொழும்பு சுதந்திர சதுக்க மண்டபத்தின் படி ஓரத்தில் காணப்பட்ட திரிபுபடுத்தப்பட்ட சட்டவிரோத 25 சிங்க கொடிகளை கருவாத்தோட்டப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

சுதந்திர சதுக்க மண்டபத்தில் நேற்று நடை பெறவிருந்த கூட்டத்துக்கு இவை கொண்டுவரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அரசியல் கூட்டம் எனும் போர்வையில் இங்கு வசேட கூட்டமொன்று நடைபெறப் போவதாக கலாசார அமைச்சின் செயலாளர் அனுஷா கோகுலவுக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றினையடுத்து, இந்தக் கூட்டத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## 26 எயிட்ஸ் நோயாளர்கள் வருட ஆரம்பத்தில் கண்டுபிடிப்பு

இவ் வருட ஆரம்ப கட்டத்திலேயே எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 26 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக, தெரிய வந்துள்ளது.

இவர்களில் பெரும் பாலானவர்கள் இளைஞர்கள் என, சுகாதார அமைச்சின் எச்.ஐ.வி எயிட்ஸ் தடுப்புப் வேலைத்திட்டப்பிரிவின்பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்தார்.

இதேவேளை, ஆண் ஓரினச் சேர்க்கை மூலம் எயிட்ஸ் பரவுவது கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள தோடு, இவ் வருடம் குருநாகல் மாவட்டத்திலும் நோயாளர்கள் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுளளது.

இதன்படி எச்.ஐ.வி எயிட்ஸ் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் பொருட்டு விரிவான நடவடிக்கைகளை இவ வருடம் மேற்கொள்ளவுள்ளதாக, சிசிர லியனகே மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ஜே.வி.பி. அலுவலக திறப்பு விழா

மக்கள்விடுதலைமுன்னணியின் யாழ்.மாவட்ட பிரதானஅலுவலகத்திறப்புவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு இல 298, கண்டிவீதி,யாழ்ப்பாணம்னும் இடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.மக்கள்விடுதலைமுன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின்யாழ். மாவட்ட தலைவர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து கொள்ளவுள்ளார்.(இ)

# பொன்சேகாவின் வருகையால் பீதி அடைந்துள்ளார் மேர்வின்

ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டுள்ளதை அடுத்து, கொழும்பில் உள்ள பாதாள உலகக்குழுக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பொன்சேகா பாராளு மன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ளதை அடுத்து, ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் சட்டத்தை தமது கையில் எடுத்து செயற்பட்ட சிலர் திக்குமுக்காடி போயுள்ளனர்.

இவர்களில் முதன்மையானவர் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எனக் கூறப்படுகிறது. பொன்சேகா சத்தியப்பிரமாணம் செய்யும் வரை அது நடக்காது என மேர்வின் சில்வா கூறி வந்துள்ளார்.

பொன்சேகா சத்தியப் பிரமாணம் செய்ததை அடுத்து மேர்வின் சில்வா கொழும்பில் உள்ள தனது சகாக்களை வீட்டுக்கு அழைத்து கலந்துரையாடியுள்ளார். இவர்களை தவிர சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த 5 வருடங்களாக ராஜபக்ஷவினருக்கான சரத் பொன்சேகாவுக்கு எதிராக செய்த தொந்தரவுகளை மேரவின் சில்வா இதன் போது தனது சகாக்களுக்கு நினைவூட்டியுள்ளார்.

இவற்றில் முக்கியமானது சரத் பொன்சேகா, வேட்பு மனுவை பெற்றபின்னர் களனி விகாரைக்கு சென்ற போது ஏற்படுத்திய இடையூறு மற்றும் கதிர்காமம் சென்ற போது வீதியை மறைத்து ஏற்படுத்திய தடை ஆகியன இவற்றில் பிரதானமாகும்.(இ)

# அரிசியை நட்ட விலையில் விற்கவில்லை-ஹரிசன்

கடந்த கால பெரும் போகத்தின் போது அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லினை விவசாய அமைச்சர் தனக்கு நெருககமானவர்களுக்கு விற்றதாக மக்கள் விடுதலை முன் னணி குற்றஞ்சுமத்தியுள்ளது.

இந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் இந்தக் குற்றஞ்சாட்டினை கிராமிய பொருளாதார மற்றும் விவசாயத்துறை அமைச்சரான ஹரிசன் நிராகரித்துள்ளார்.

மேலும் கடந்த கால பெரும போகத்தின் போது விவசாயிகள் அதிகளவு நெல்லினை உற்பத்தி செய்ததால் அரசாங்கம் 2000 மெட்ரிக் தொன்னிற்கு அதிகமாக இவரகளிடமிருந்து நெல்லை கொளவனவு செய்ததால் அவற்றை களஞ்சியப்படுத்த வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது.

மேலும் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்ட அரிசியை ரூபாய் 32.50 சதத்திற்கு விற்பதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக முடிவு செய்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அரிசி விற்பனை தொடர்பாக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் முறைப்பாடுகளுக்கு பதிலளிக்க தான் எந்த நேரத்திலும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## கைகள் கட்டப்பட்ட நிலையில் சிறுவனின் சடலம் கண்டெடுப்பு

இரத்தினபுரி, மாரப்பன பகுதியில் தேயிலைக் கொழுந்து மடுவத்திலிருந்து 15 வயது சிறுவனின் சடலம் நேற்றுக்காலை கண் டெடுககப்பட்டுள்ளது.

சிறுவனின் இரண்டு கைகளும் பட்டியொன்றினால் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இரத்தினபுரி, மாரப்பன, கல்இன்ன பகுதியைச் சேர்ந்த சிறுவனின் சடலமே மீட்கப்பட்டுளளமை தெரியவந்துளளது.

மரணம் தொடர்பான நீதவான் விசாரணை இரத்தினபுரி நீதவானினால் முனனெடுக்கப்படவுள்ளது.(இ)

## அமைச்சர்களுக்கு 90லட்சம் பெறுமதியான வாகனங்கள்

பாராளுமன்ற அமைச்சர்களுக்கு கட்டண சலுகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வாகன கொள்வனவிற்காக அமைச்சரவை படிவம் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 62,500 அமெரிக்க டொலர் பெறுமதியான தமக்கு விருப்பமானவாகனங்களை அமைச்சர்கள் கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரிகளின் வங்கிக் கணக்குகளும் பரிசோதனை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூன்று பாதுகாப்பு அதிகாரிகளின் வணிக வங்கிக் கணக்குகளின் விபரங்களை சீஐடிக்கு சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்று முன்தினம் குறித்த வங்கிகளுக்கு உத்தரவிட்டார்.

இதில் முன்னாள் ரக்பி வீரர் வாஸிம் தாஜுதீனின் கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள கப்டன் திஸ்ஸ விமலசேனவும் உள்ளடங்குகிறார்.

இதனை தவிர தமித் கோமின ரணசிங்க மற்றும் வன்னியாராச்சி நெவில் ஆகிய அதிகாரிகளின் வங்கிக் கணக்குகளே பரிசீலிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே பணச்சலவை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோசித ராஜபக்ஷவின் விசாரணை தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சீஜடியின் கோரிக்கைக்கு இணங்கவே நீதவான் இந்த உத்தரவை 79 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு பிறப்பித்துள்ளார். (இ)

# தவறவிட்ட தொலைபேசி அழைப்பினால் பல இலட்சத்தை பறிகொடுத்த இளைஞன்

இளைஞனுடன் தொலைபேசியில் உரையாடி காதல் உறவை ஏற்படுத்தித் தன்னை கிராம சேவகர் எனக்காட்டிக் கொண்டு அவரிடமிருந்து சுமார் 3 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் மற்றும் தங்க ஆபரணங்களை மோசடி செய்த யுவதியொருவர் மற்றும் அவருக்கு உதவிபுரிந்த மற்றுமொரு பெண் ஆகிய இருவரைக் கைது செய்வதற்காக அநுராதபுர பொலிஸ தலைமையக பொலிஸார் விசாரணைகளை முடுக் கி விட்டுள்ளனர்.

அநுராதபுரம், ஜயந்தி மாவத்தையில் உள்ள பிரசித்திபெற்ற விடுமுறை விடுதியில் வேலை பார்க்கும் 25 வயதுடைய இளைஞன்செய்த முறைப்பாட்டுக் கமைய, விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

இந்த மோசடியில் ஈடுபட்ட இரண்டு பெண்களும் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. எனினும், அவர்களது வயது தொடர்பில் சரியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

முறைப்பாட்டாளரான இளைஞனுக்கு, 5 மாதங்களுக்கு முன்னர் கிடைத்த தவறவிட்ட அழைப்பிலேயே (மிஸ்ட் கோல்) இரு வருக்குமிடையில் இந்தக் காதல் மலர்ந்துள்ளதாகபொலிஸார் தெரிவிக்கின்றனர்.(இ)

## யால தேசிய பூங்காவுக்குள் நுழையும் வாகனங்களைக் குறைக்க நடவடிக்கை

யால தேசிய பூங்காவிற்குள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கபடவுள்ளதாக வன இலாகா தெரிவித்துள்ளது.

மேலும் நாளொன்றுக்கு 700 வாகனங்கள் இந்தப் பூங்காவினுள் உள் நுழைவதாகவும் வன இலாகா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரசிரி பண்டார தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கையினை கட்டுப்பாட்டுக்கமைய தற்போது மூடப்பட்டிருக்கும் கல்கே நுழைவாயிலை திறபபதற்கும் உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# முழு ராணுவத்தையும் இழிவுபடுத்தியுள்ளது அல்ஹுசைன் கருத்து



## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**மனித உரிமைப்பேரவை ஆணையாளர்சயிட் அல்ஹுசைனின் கருத்து முழு இராணுவத்தையும் இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். தங்காலை கடற்கரைப்பகுதியில்வைத்து ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், எவ்வளவு மூடி மறைத்தாலும் கலப்பு நீதிமன்றம் மூலம் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கையில் விசாரணை நடத்தப்படுவதனை தடுக்க முடியாது.

இராணுவம் ஏதேனும் தவறிழைத்திருந்தால் ஜெனிவா தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சயிட் அல் ஹுசைன் தெரிவிக்கின்றார்.

இதன் மூலம் முழு இராணுவத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை மூடி மறைக்க முடியாது.

எவ்வளவு மக்களை பிழையாக வழிநடத்தினாலும் கலப்பு நீதிமன்றம் அமுல்படுத்தப்படும். இதன் மூலம் நாட்டை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளமை உறுதியாகும்.

எனக்கு தெரியும் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் செய்தியாளர் சந்திப்பில் நீண்ட உரையொன்றை ஆற்றியிருந்தார்.

நாம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அமைய நமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. விசாரணை நடத்தும் நடவடிக்கை காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. நாம் அதனை துரிதப்படுத்த முயற்சிக்கின்றோம்.


போரை நான் முடிவுக்குக் கொண்டு வந்திராவிட்டால் இவ்வாறான எந்தப் பிரச்சினையும் கிடையாது.

எமது நாட்டில் காணப்படும் அனைத்து பிரச்சினையும் மூடி மறைக்கப்பட்டுள்ளன என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கூட்டு எதிர்க்கட்சியின் கோரிக்கை குறித்து கவனம் செலுத்தப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)



கூட்டு எதிர்க்கட்சியின் கோரிக்கை குறித்து கவனம் செலுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சியினர் சுயாதீனமாக இயங்குவது தொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து தனித்து தீர்மானம் எடுக்க முடியாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் இது குறித்து கலந்தாலோசித்து, அடுத்த நாடாளுமன்றத் கூட்டத் தொடரின் போது தீர்வு வழுங்கப்படும்.

கூட்டு எதிர்க்கட்சியினரின் கோரிக்கை குறித்து சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் கூட்டு எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு உரிய தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த 51 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க அனுமதியளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 630


Search for people, places and things Nagendram Home




கீர்த்திகா வடிவேல்




வர்மலன்



பாலா சர்மா



துளசி



நிஷா



ஜினோ

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வலைத்தளம் தொடர்பான கற்கைநெறி ஆரம்பம்

யாழ்.அமெரிக்க கூடத்தினால் (American corner) நடத்தப்பட்டு வரும் பலவகையான இலவச கற்கை நெறிகளுடன் இப்போது வலைத் தளம் தொடர்பான கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் 3 மாத கற்கை நெறியில் கணனி நிரலாக்கம் (introduction to programming), HTML அடிப்படை வலைத்தள உருவாக்கம் (introduction to Website basis) என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

வலைத்தளம் ஒன்றினை திறம்பட செயற்படுத்துவதற்கு அவர்கள் பயிற்றிவிக்கப்படுவதுடன் அமெரிக்க தகவல் கூடத்தின் ஏனைய வசதிகளையும் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும். கற்கை நெறியானது ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறும். அந்த வகையில் கற்கை நெறியானது நாளை சனிக்கிழமை (மாசி 13) மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது.

முதலில் பதிவு செய்யும் 20 மாணவர்களை மட்டும் கற்கை நெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

முற்பதிவுகளை மேற்கொள்வதற்கு 0212220665 அல்லது 077 2926048 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு american corner jaffna 2011@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு இல 23, அத்தியடி வீதி நல்லூர் என்ற முகவரியில் அமைந்துள்ள அமெரிக்க தகவல் கூடம் அறிவித்துள்ளது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-11.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.02 | 146.02 |
| பவுண்ட் | பிரிட்டன் | 205.85 | 213.11 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 159.42 | 165.73 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 145.11 | 151.16 |
| டொலர் | கனடா | 101.39 | 105.51 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.06 | 104.78 |
| டொலர் | சிங்கப்பூர் | 101.91 | 105.81 |
| ரூபா | இந்தியா | 2.1212 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.5458 |
| குவைத் | டினார் | 481.5125 |
| ஓமான் | ரியால் | 373.7323 |
| கட்டார் | ரியால் | 39.5205 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3692 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1783 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனாமடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 70 | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 240 | 220 | 250 | 250 |
| தக்காளி | 50 | 50 | 60 | 50 | 80 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 50 | 60 | 80 | 100 | 100 | 80 |
| கரட் | 240 | 200 | 180 | 240 | 240 | 300 | 250 |
| பூசணி | 100 | 100 | 40 | 100 | 50 | 100 | 70 |
| புடோல் | 60 | 60 | 40 | 60 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 40 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 65 | 60-100 | 80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 50 | 70 | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 100 | 90 | 80 | 120 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 100 | 120 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 85 | 80 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 150 | 150 | 100 | 120 | 140 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 60 | 90 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 60 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 250 | 300 | 180 | 240 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400 | 800 | 600 | 500 | 800 |
| போஞ்சி | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 60 | — | 80 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 15 | 40 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 80 | 80 | 40 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 45 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 120 | 100 | 90 | 160 | 120 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 60 | 80 | 80 | 80 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 40 | 35 | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஜெயவர்த்தனவுக்கு ராஜீவ் காந்தி எச்சிரிக்கை 103

...எனவே, ஒரே நாளில் நடந்த தாக்குதல்களில் 140 தமிழர்கள் கொல்லப்பட்டனர். திருகோணமலைப் பகுதியில் இலங்கையின் முப்படையினர் தாக்குதல் நடத்திய இந்தச் சம்பவங்கள் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மூன்று வாரங்களில் நிகழ்ந்தது.

**புதிய சமரசத் திட்டம்**

இதற்கிடையே திம்பு பேச்சு வார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சமரசப் பேச்சு தொடர வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி விரும்பினார். இதற்காக ஜெயவர்த்தனாவின் தம்பி ஹெக்டர் ஜெயவர்த்தனா டெல்லி வந்து ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இதைத் தொடர்ந்து புதிய சமரசத் திட்டம் உருவாக்கப்பட்டது.

**திட்டம் என்ன?**

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கிறார்கள். அந்த 2 பகுதிகளிலும் 2 பிராந்திய கவுன்சில்கள் அமைப்பது என்றும் சட்டம்- ஒழுங்கு (பொலிஸ்) பராமரிப்பு, அரசு வேலைக்கு ஆள் எடுத்தல் போன்ற அதிகாரங்களை இந்தக் கவுன்சில்களிடம் ஒப்படைப்பது என்றும் இந்த புதிய சமரசத் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

இந்தக் குறைந்த பட்ச திட்டங்களை இலங்கை அரசு ஏற்றதால்தான் மேற்கொண்டு சமரசப் பேச்சைத் தொடர முடியும் என்று ஹெக்டே ஜெயவர்த்தனவிடம் ராஜீவ் காந்தி கண்டிப்புடன் கூறினார்.

ராஜீவ் காந்தியிடம் பேச்சு வார்த்தை நடத்திவிட்டுக் கொழும்பு திரும்பிய ஹெக்டர் ஜெயவர்த்தனவிடம் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்.

மேலும் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ராஜீவ் காந்தி கூறியதாவது:-

**இராணுவமே பொறுப்பு**

இலங்கையில் நடக்கும் பெரும்பான்மையான வன்முறைகளுக்கு ராணுவமே பொறுப்பு.

இதில் ஒரு பகுதியை இலங்கை ஜனாதிபதி மறுக்கிறார். ஆனால், உலகம் முழுவதும் இருந்து வரும் தகவல்கள் இராணுவத்தினர் அட்டூழியம் செய்வதாகக் கூறுகின்றனர்.

இந்தப் போக்கு மாற வேண்டும். இலங்கை அரசாங்கத்திடம் தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

**தடுக்க வேண்டும்**

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை இராணுவத்தினர் அட்டூழியம் செய்து வருவதை நிறுத்த வேண்டும். இதை ஹெக்டே ஜெயவர்த்தனா மூலம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குத் தெரிவித்து இருக்கிறேன். வன்முறைகள் நீடிப்பது சமரச உடன்பாடு ஏற்படுவதைக் கடினமாக்கிவிடும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படக் கூடிய நம்பிக்கை ஒளி தெரிகிறது.

இவ்வாறு ராஜீவ்காந்தி கூறினார்.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் 24.09. 1985 அன்று முழு அடைப்பு (பந்த்) நடந்தது. அன்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உண்ணாவிரதம் இருந்தார்.

இலங்கை இராணுவம் கடற்படை, விமானப்படை ஆகிய முப்படையினரும் தமிழர்கள் மீது மும்முனைத் தாக்குதல் நடத்தி வருவது பற்றி, சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆலோசனை நடத்தினார்.

அமைச்சர்களும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

**முழு அடைப்பு**

இலங்கைத் தமிழர்களைச் சிங்கள வெறியர்கள் படுகொலை செய்வதைக் கண்டித்து 24 ஆம் திகதி தமிழ்நாடு முழுவதும் முழு அடைப்பு (பந்த்) நடத்த முடிவு செய்யப்பட்டது.

இது பற்றிய தீர்மானம் வருமாறு:-

இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு சிங்கள இராணுவ வெறிக்கு ஆளாக்கப்பட்டு சொல்லொணாக் கொடுமைகளால் பிறந்த மண்ணை விட்டு ஆதரவற்றவர்களாக அகதிகளாக விரட்டப்படுகிறார்கள்.

அண்மையில் இலங்கையில் தமிழர்கள் வாழும் இடங்களில் குறிப்பாகத் திருகோணமலை, மட்டக்களப், வவுனியா போன்ற பகுதிகளில் மூர்க்கத்தனமான் முறையில தமிழர்களைத் தாக்கி வரும் கொடுமைச் செயலில் இலங்கை அரசின் இராணுவமும் குண்டர்களும் ஈடுபட்டிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதற்கு அறிகுறியாக 24.09.1985 காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அடையாள முழு அடைப்பும், உண்ணாவிரதமும் அமைதியாக மேற்கொள்ள வேண்டுமென்று தமிழக மக்கள் அனைவரையும் இந்த அனைத்துக் கட்சி கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



(தொடரும்)

# சிங்களவர்கள் அதிகாரங்களை பகிர்வதில் எந்தத் தவறுமில்லை

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)



**நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்காக சிங்கள சமூகம தமது அதிகாரங்களை ஏனைய சமூகங்களுடன் பகிர்வதில் எந்தத் தவறுமில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

அரசாங்க செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகார பரவலாக்கம் என்பது சிங்கள மக்களுடைய அதிகாரங்களை குறைப்பது என்று அர்த்தமல்ல. மாறாக அவர்களை போன்று ஏனைய சமூகங்களும் உரிமைகளை அனுபவிக்க வேணடும் என்பதே அர்த்தமாகும் என்று சந்திரிகா தெரிவித்தார்.

இந்தநிலையில் 2000 ஆம் ஆண்டு தமது அரசாங்கம் முன்கொணர்ந்த தீர்வு திட்டத்தை விட முன்னேற்றமான தீர்வு திட்டம் ஒன்றை முன்கொணர தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அடுத்துவரும்ஐந்து ஆணடுகளிலும் இந்த நோக்கைகொண்டு அரசாங்கம் செயற்படும என்றும் அவர் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில் அவர் முன்னாள் பிரதமர் ஸ்ரீ மாவோ பண்டார நாயக்கவை பதவியில் இருந்து அகற்ற முன்னின்று செயற்பட்டவராவார்.

எனவே அவர் கட்சிக்கு எதிராக செயற்படுவது முதல் தடவையல்ல என்று சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# புதிய நீதியமைச்சரை நியமிக்க வேண்டும்

### சரத் விஜேசூரிய வலியுறுத்து

புதிய நீதி அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டுமென நீதியான சமூகத்திற்கான அமைப்பின் தலைவர் பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மருதானையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நல்லாட்சிக் கொள்கைகள் நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டுமாயின் புதிய நீதி அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

நாட்டின் நீதி பாதுகாப்பானதாக இருக்க வேண்டுமாயின் நீதி அமைச்சுப் பதவி சட்டத்தை மதிக்கும் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

சட்டத்தை பாதுகாப்பதாக அரசாங்கம் கூறி வருகின்ற போதிலும் நீதி அமைச்சர் குற்றவாளிகளை பாதுகாத்து வருகின்றார்.

இவ்வாறான ஓர் சூழ் நிலையில் சட்டம் ஒழுங்கை எவ்வாறு நிலைநாட்டுவது? தற்போதைய நீதி அமைச்சர் மக்களின் நம்பிக்கையை சிதைத்துள்ளார் என பேராசிரியர் விஜேசூரிய குற்றம் சுமத்தியுள்ளார். (இ)

# சட்டமூலங்களை நிறைவேற்ற கூடிய பலம் அரசிற்கு உண்டு

### கரு பரணவிதாரண தெரிவிப்பு



சட்ட மூலங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய பலம் அரசாங்கத்திற்கு உண்டு என பிரதி ஊடக அமைச்சர் கரு பரணவிதாரண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்படும். அதற்கான பலம் ஆளும் கட்சிக்கு அதிகரித்துச் செல்கின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலமானது இலவசக் கல்வி சட்ட மூலத்திற்கு நிகரானது.

இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டமை ஒட்டுமொத்த மகளிர் சமூகமும் அடைந்த வெற்றியாக கருதப்பட வேண்டுமென கரு பரணவிதாரண மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தை பெறுவதற்கு ஜேர்மன் ஆதரவு

### ஹர்ச டி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

ஜீ.எஸ்.பி சலுகைத் திட்டத்தை மீளவும் பெற்றுக் கொள்ள ஜேர்மன் அரசாங்கம் ஆதரவளித்துள்ளது என பிரதி வெளிவிவாகர அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கைக்கு மீளவும் ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

எதிர்வரும் நாட்களில் இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும.

விண்ணப்பம் சமர்ப்பித்து எட்டு மாதத்திற்குள் சலுகைத் திட்டம் வழங்குவது குறித்த இறுதித் தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் அறிவிக்கும்.

இதற்கு முனன்தாக சலுகைத் திட்டம் பெற்றுக் கொள்ளப்பட்ட போது ஐரோப்பிய நாடாளுமன்றின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கவில்லை.

எனினும் தற்போது ஐரோப்பிய நாடாளுமன்றின் அனுமதியையும் பெற்றுக் கொளள வேண்டியுள்ளது.

எனவே, சலுகைத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ள ஜேர்மனிய அரசாங்கத்தின் ஆதரவு எமக்கு பெரும் சக்தியாக அமையும் என ஹர்ச டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### வரபோகும் கஷ்டகளை நினைத்து வருத்தப்படுகிறீர்களா?

வேண்டாம்.

கஸ்டங்கள் விடாது நம்மை வந்து துரத் துகின்றன. இது ஒன்றும் நமக்கு புதிய தல்ல. எனவே அவற்றை வரவேற்கவும் சமாளிக்கவும் நாம் தயாராகி விட வேண் டியது தான் புத்திசாலித்தனமான செயலாகும்.

பெரும்பாலான கஷ்டங்களை நாமே இழுத்துப் போட்டுக் கொள்கிறோம். நம்முடைய செயல்களையும் திட்டங்களையும் விஸ்தரித்துக் கொண்டு அகலக் கால் வைப்பதால்த்தான் இல்லாத தொல்லைகளெல்லாம் வந்து சேருகின்றன.

வரப் போகும் கஸ்டங்கள் முன் கூட்டியே தெரிந்து விடுவதால் ஓர் அனுகூலம் இருக்கிறது. எதிரி நம்மை அடிக்கப் போகிறான் என்பதை உணர்ந்தும் நம் உடம்பு அதை ஏற்றுக் கொள்ளவோ தப்பிக்கவோ தயாராகி விடுவதைப் போல்,நம் மனமும் வரப்போகும் கஷ்டங்களை எண்ணி அவற்றின் விளைவுகளைச் சந்திக்கத் தயாராகிவிட வேண்டும்.

எதிர் பாராத அடிகளை நம்மால்த் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆனால் எதிர்பார்த்த அடிகளையும் நம்மால்த் தாங்கிக் கொள்ள முடிவதில்லை எ்ன்றால் அது மனப்பக்குவம் அற்ற நிலையைக் காண்பிக்கிறது. எவ்விதக் கஷ்டமும் அது ஏற்படும் போது பெரிதாகத்தான் தோன்றும் அப்புறம் பார்த்தால் இதற்காகவா கஷ்டப்பட்டோம் என்று எண்ணத் தோன்றும். சில நாளில் அதைமற்றவர்களிடம் நகைப்புக்குரிய விடயமாகச் சொல்லும் நிலைமை கூட உருவாகும்.

நேரத்துடனும் காலத்துடனும் கஷ்டங்கள் பொதுவாக மறைந்து விடுகின்றன. ஆகையால் எதையும் எண்ணித்தேவையில்லாமல் துன்பங்கொள்ளக் கூடாது.

“எப்படிப்பட்ட துன்பத்தையும் சமாளிக்கக் கூடிய மனப்பக்குவத்தை இறைவா! எனக்கு நீ அருள்புரிவாயாக” என்று வேண்டிக் கொள்ளவேண்டும்.


இறைவனிடத்தில் நம்பிக்கை இல்லாதவன் இத்தகைய மனப்பக்குவத்தை தானாகப் பெற முயல வேண்டும்.

இவற்றை விட்டு விட்டு எதற்கெடுத்தாலும் வருந்திக் கொண்டிருந்தால் கட்டுப்படியாகாது.

*லேனா தமிழ்வாணன்*

# வெளிவிவகார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்?

### மங்களவிடம் வாசுதேவ கோரிக்கை



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொரளை என்எம் பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனை கூட்டு எதிர்க்கட்சியினர் சந்திக்க தடை ஏற்படுத்தியமை மற்றும் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கி தீர்மானத்தை நிறைவேற்றியமை ஆகிய காரணிகளை ஏற்றுக் கொண்டு மங்கள சமரவீர பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதியொருவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முன்வைத்த யோசனைகள் காரணமாக நாடு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

சயிட் அல் ஹுசைனின் இலங்கை விஜயத்தின் போது வெளியிட்ட கருத்துக்கள் மூலம் இந்த விடயம் வெளிச்சமாகியுள்ளது.

இந்த யோசனைகளை இலங்கையே முன்வைத்துள்ளது என ஆணையாளர் கூறுகின்றார்.

அப்படியென்றால் இணை அனுசரணையாளராகி இலங்கையின் சார்பில் யோசனைகளை முன் வைக்குமாறு வெளிவிவகார அமைச்சருக்கு யார் பணிப்புரை விடுத்தது?



கூட்டு எதிர்க் கட்சியினரை சயிட் அல் ஹுசைன் சநதிக்க ஆயத்தமானது போது வெளிவிவகார அமைச்சர் அதனை தடுத்து விட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது பதவியை இராஜினாம செய்ய வேண்டும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ)




# ரோஜா இளவரசி!

முன்னொரு காலத்தில் பாலசமுத்திரம் என்ற நாடு வளம் மிகுந்த நாடாக விளங்கியது. அந்நாட்டு அரசனுக்கு நீலிமா என்ற மகள் இருந்தாள். கண்ணைக் கவரும் பேரழகுடன் விளங்கினாள்.

அந்த அரசர் ரோஜாச் செடிகளுக்கு என்றே பூந்தோட்டம் ஒன்றை அமைத்து இருந்தார். அங்கே ஆயிரக் கணக்கான ரோஜாச் செடிகள் இருந்தன. அவற்றில் பல வண்ண மலர்கள் பூத்து மணம் வீசின.

நாள்தோறும் இளவரசியும், தோழியர்களும் பூந்தோட்டத்திற்குச் செல்வர். அங்கே மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருப்பர்.

அன்றும் வழக்கம் போல தோழிகளுடன் இளவரசி பூந்தோட்டத்திற்குச் சென்றாள். ரோஜா பூக்களைப் பறித்த அவர்கள், ஒருவர் மீது ஒருவர் எறிந்து விளையாடினர்.

மகிழ்ச்சியும், ஆரவாரமுமாக அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த வழியாக முனிவர் ஒருவர் வந்தார். அவர்களது சிரிப்பொலியும்,



கூச்சலும் அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

அப்போது, தோழி மீது நீலிமா ஒரு ரோஜாப் பூவை எறிந்தாள். அந்த ரோஜாப் பூ தோழி மீது படாமல் அங்கு வந்த முனிவரின் முகத்தில் விழுந்தது. அதிலிருந்த முட்கள் முனிவரின் கன்னத்தில் கீறலை ஏற்படுத்தின.

"யார் என் மேல் பூவை எறிந்தது?" என்று கோபத்துடன் கத்திய முனிவர் திரும்பிப் பார்த்தார்.

தன் தவறை உணர்ந்த இளவரசி அவர் முன் நடுங்கிய படி நின்றாள்.

"யார் வருவது என்பது தெரியாமல் என்ன விளையாட்டு இது? பெரியவர்களை மதிக்க தெரியாத நீ, இன்றுமுதல் ரோஜாச் செடியாக மாறி விடுவாய்," என்று சாபம் தந்தார்.

அவரது திருவடிகளில் விழுந்த நீலிமா, "அறியாமல் செய்த பிழை இது. இதற்கு இவ்வளவு பெரிய தண்டனையா? என்னை மன்னித்து அருள் செய்யுங்கள்," என்று அழுதாள்.

இளவரசிகளின் தோழிகளும் அழுதனர்.

அவர் உள்ளம் இளகியது.

"பெண்ணே! நான் தந்த சாபத்தை முழுமையாக மாற்ற இயலாது. அதில் மாற்றம் செய்ய இயலும். நீ பகலில் மட்டும் இங்கே ரோஜாடிச் செடியாக இருப்பாய். இரவில் பழைய வடிவத்தில் இளவரசியாக இருப்பாய்," என்றார்.

"முனிவரே! இந்தச் சாபத்திலிருந்து நான் விடுபட வழியே இல்லையா? நான் எப்போதும் ரோஜாச் செடியாகவே இருக்க வேண்டுமா?" என்று வருத்தத்துடன் கேட்டாள் இளவரசி நீலிமா.

"இங்கே ஆயிரக்கணக்கான ரோஜாச் செடிகள் உள்ளன. அவற்றில் நீ எந்த ரோஜாச் செடியாக உள்ளாய் என்று கண்டுபிடிக்க வேண்டும். அந்தச் செடியை வேரோடு பிடுங்கினால் உன் சாபம் நீங்கும்.

"இந்த முயற்சியில் தவறுதலாக வேறு ரோஜாச் செடியைப பிடுங்கக் கூடாது. அப்படிச் செய்தால் உனக்குத்தான் ஆபத்து. பிறகு உன்னால் எப்போதும் சொந்த வடிவம் பெற முடியாது," என்று சொல்லி விட்டுச் சென்றார் முனிவர்....

(தொடரும்)




- 1502 - இந்தியாவுக்கான தனது இரண்டாவது கடற் பயணத்தை வாஸ்கோடகாமா லிஸ்பனிலருந்து ஆரம்பித்தார்.
- 1733 - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியா ஆங்கிலக் குடியேற்ற நாடாக ஜேம்ஸ் ஒக்லிதோர்ப் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1771 - சுவீடன் மன்னன் அடொல்ஃப் பிரெடெரிக் இறந்ததை அடுத்து அவனது மகன் மூன்றாம் குஸ்டாவ் மன்னன் ஆனான்.
- 1818 - சிலி ஸ்பெயினிடமருந்து விடுதலையை அறிவித்தது.
- 1832 - கலாபகசுத் தீவுகளை எக்குவாடோர் இணைத்துக் கொண்டது.
- 1873 - எமிலியோ காஸ்டெல்லார் ஸ்பெயினின் புதிய குடியரசின் பிரதமராக ஆனார்.
- 1912 - சீனாவின் கடைசி அரசன் க்சுவாண்டொங் முடி துறந்தான்.
- 1912 - சீனக் குடியரசில் கிரெகோரியன் நாட்காட்டி அமுலுக்கு வந்தது.
- 1927 - முதலாவது பிரித்தானியப் படைகள் ஷங்காய் நகரை அடைந்தன.
- 1934 - ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.
- 1961 - வெனேரா 1 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் வெள்ளிக் கோளை நோக்கி ஏவியது.
- 2001 - நியர் ஷூமேக்கர் என்ற விண்கலம் 433 ஈரோஸ் என்ற சிறுகோளில் தரையிறங்கியது. சிறுகோள் ஒன்றில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 2002 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் தலைவர் சிலொபடான் மிலோசெவிச் மீது ஹேக் நகரில் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பமாயின.

**பிறப்புகள்**

- 1809 - சார்ள்ஸ் டார்வின், ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் (இ. 1882)
- **1809 - ஆபிரகாம் லிங்கன், ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி (இ. 1865)**
- 1918 - ஜூலியன் ஷ்விங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ. 1994)
- 1967 - என். ரவிக்கிரன், சித்திர வீணைக் கலைஞர்

**இறப்புகள்**

- 1804 - இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த மெய்யியலாளர் (பி. 1724)
- 1908 - ஜி. யு. போப், தமிழ்நாட்டில் தமிழ்ப் பணி புரிந்த அமெரிக்கர் (பி. 1820)
- 2009 - முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத் தமிழன் (பி. 1982)

### ஆப்ரகாம் லிங்கன்



1809 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆபிரகாம்லிங்கன். அவரது தந்தை தோமஸ் லிங்கன். குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல் போன்ற அரிய குணங்கள் சிறு வயதிலேயே லிங்கனிடம் இருந்தது. எப்போதும் கலகலப்பாகப் பழகுதல் கதை சொல்லுதல் வேடிக்கை யாகப் பேசுதல் ஆகிய லிங்கனின் குணங்கள் அவர்மீது மற்றவர் களை விருப்பம் கொள்ளச் செய்தன.

இவர் தனது இருபத்து மூன்றாவது வயதில் முதன் முதல் ஆபிரகாம் லிங்கன் பிளாக்காக் போரில் ( black hawk war ) கலந்து தலைவ னாக பணியாற்றியது அவருக்கு புதியதோர் பாதையை காட்டியது.

ஆபிரகாம்லிங்கன் ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவராவார். அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர்.

1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க, தென் மாநிலப் பிரிவினைக் கருத்தாளர்களை எதிர்கொண்டு உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர்.

1847 தொடக்கம் 1849 ஆண்டுகளில் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்தார். 1860 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1865 இவர் வோஷிங்டன் டி.சியில் உள்ள ஃவோர்ட் அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் கொல்லப்பட்டார். அமெரிக்க ஒன்றியத்தின் ஒற்றுமைக்காக உயிர் துறந்து புகழ் எய்தினார்.



# ீ கற்பக விநாயகர் ஆலய
# ஷேக சிறப்புமலர்-12.02.2016



சவகுரு சிவஸ்ரீ பரமசாமிக்குருக்கள் தலைமையில் **அந்தரித** கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டு தடைப்பட்டிருந்த பூசைகள் வழமைபோல் நடைபெற்றன. 2003 ஆம் ஆண்டு ஆலய உட்கொட்டகைகள் சீமெந்திலான வில் மண்டபங்களாக மாற்றப்பட்டு ஆலயத்தின் ஏனைய வாசல்களான தெற்கு, மேற்கு,வடக்கு ஆகிய வாசல்களுக்கு கோபுரங்கள் அமைக்கப்பட்டு இலங்கையிலே முதன் முதல் நான்கு கோபுரங்கள் கொண்ட பெருமையுடன் 01.02.2014 ஆம் ஆண்டு சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

2010 ஆம் ஆண்டு புதிய சப்பறம் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் இடம் பெற்றது.சைவசமயத்தவர்கள் வழிபாடுகள் நிறைவடைந்த கையோடு அட்டதிக்கு பரிபாலகரை வணங்க வேண்டும் என நாவலர் எழுதிய சைவ அனுட்டான விதியில் உள்ளது. அதேபோல் எமது ஆலயத்திலும் அட்டதிக்கு பரிபாலகர்களுக்கு அட்டதிக்குகளிலும் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவும் இலங்கையில் முதன் முதல் நடைபெற்ற பெருமையாகும். 2012, 2013 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஆலய **உடபிகார** வீதிகளில் விநாயகரது 32 அவதாரங்களும் சிவபெருமானது 108 தாண்டவங்களும் நால்வரது திருவுருவங்களும் புடைப்புச் சிற்பங்களும் ஆலயத்தினை கலையம்சம் கொண்ட ஆலயமாக மாற்றியுள்ளன. அத்துடன் ஆலய வெளிச்சூழலில் பூசைக்கு வேண்டிய பூ வகைகள் தாராளமாக கிடைக்கின்றன. அதேபோல் சுமார் குறிப்பிடத்தக்க அளவு ஓம சமித்துவகைகள் ஆலய வெளிவீதியில் செழித்து நிற்கின்றன.

இவ்வளவு பெருமைகளைக்கொண்ட ஆலயத்தில் இவ்வருடம் நூற்றாண்டு நிறைவு காலத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்பானதாகும். இம்முறை அதாவது 12.02.2016 நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வின்போது அற்புதமான முறையில் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெற திருவருள் கிடைத்துள்ளன. கும்பாபிஷேக தினத்தன்று காலை யாக பூசையின் போது ஆறு சிறுமிகளும் கும்பம் வீதிவலம் வரும்போது 24 சிறுமிகளும் நடன விருந்தளிப்பர். பாரம்பரிய முறையான கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம் முதலிய பாரம்பரியக் கலைகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. எமது நிர்வாகத்தில் இக்கும்பாபிஷேகம் மூன்றாவது முறையாக நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேகத்தினை தரிசிக்க வரும் அனைத்து அடியவர்களுக்கும் போக்குவரத்து மற்றும் இதரவசதிகள் எமது ஆலயத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால் விநாயக அடியவர்கள் அனைவரும் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து வேண்டும் வரங்களைப் பெற்றுய்யும் வண்ணம் விநாயகனின் பாதங்களை பணிந்து நிற்கின்றேன்.

**"கற்பக விநாயகன் பாதம் பணிந்தால் அதிக வரம் பெறலாம்"**
**நிர்வாகஸ்தர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் காரைநகர்.**



## வாழ்த்துச் செய்தி

காரைநகரில், வாரிவளவு கும்பரைப்புலம் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ கற்பக விநாயகருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும் அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக வைபவத்திற்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு அருள்பாலித்த ஸ்ரீ கற்பக விநாயகரைத் தொழுது மங்களகரமான இவ்வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல வருடங்கள் நித்திய பூசைகளில் கலந்து இறைவனை மனம், மெய் முதலியவற்றால் வழிபாடு செய்தால் கிடைக்கப் பெறும் இறைவனின் அருளை ஒரே நாளில் இறைவன் கும்பாபிஷேகத்தை கண்டு வழிபட்டவர்களுக்கு கிடைக்கும் என்பது சான்றோர் கூற்று. அத்தகைய அருளை காரைநகர் வாழ் மக்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்த ஆலய நிர்வாக சபை அங்கத்தவர்கள் மற்றும் ஆலயத் தொண்டர்கள் அனைவரதும் சேவை பாராட்டத்தக்கது.

இக் கும்பாபிஷேக வைபவத்திற்கு தமிழ்நாடு சிதம்பரம் திருத்தலத்தின் தில்லை மூவாயிரவரில் ஒருவராகிய பிரம்ம ஸ்ரீ கணேச பரமேஷ்வர தீட்சிதர் அவர்கள் தலைமையில் வேத விற்பன்னர்கள் வேதபாராயணம் செய்வதும் மதுரையிலிருந்து வருகை தரும் ஓதுவார் அவர்கள் தேவார பாராயணம் செய்வதும் மேலும் சிறப்பானதாக அமைகின்றன.

உலகில் யாழ். குடாநாடு ஒரு சிறிய பகுதியாக இருக்கின்ற போதிலும் அதிக அளவுகளில் இந்து ஆலயங்கள் இருப்பதும், அவை ஆகம முறைப்படி அமைக்கப் பெற்று கிரியை வழிபாடுகள் செய்யப்படுவதும் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் சமயத்தின் மீது கொண்டுள்ள பற்றுதலையும் பக்தியையும் காட்டுகின்றன.இப்படியான சிறப்புக்களைக் கொண்ட யாழ். மண்ணில் எனக்கு சிறிது காலம் வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததை பெரும் பேறாக கருதுகின்றேன்.

இறைவனின் குடமுழுக்கு வைபவத்தைக் காணும் அனைத்து அடியவர்களுக்கும் அருள்பாலிக்க ஸ்ரீ கற்பக விநாயகரை தொழுது நிர்வாக சபை உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் அடியார்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

**ஆ.நடராஜன்**
**இந்தியத் துணைத்தூதுவர்,யாழ்ப்பாணம்.**



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் சப்த தீவுகளில் காரைநகர் பிரதேசம் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தை தன்னகத்தே கொண்ட சிறப்புக்குரிய பிரதேசமாகும். இங்கு வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயமும் அடியவர்களுக்கு அருளை வாரி வழங்கும் ஓர் அரிய ஆலயம் எனலாம்.

இங்கு நடைபெறும் கிரியைகள் அடியவர்களின் மன அமைதிக்கும் ஒழுக்கத்திற்கும் ஆதாரமாய் அமைகின்றன. இதன் அடிப்படையில் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற விநாயகரின் திருவருள் கூடியுள்ளது. இது எமக்கெல்லாம் கிடைத்த அரிய பேறாகும்.

விக்கினங்களை போக்கும் வேத விநாயகப் பெருமானின் ஆலயம் சிறக்கவும் அடியவர்களுக்கு அருட்பிரவாகத்தை தொடர்ந்து வாரி வழங்கவும் இக் கும்பாபிஷேகம் சிறப்புற அமையும் எனலாம்.

இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உழைத்த உத்தமர்களை பாராட்டி கும்பாபிஷேகம் சிறந்த பயனை வழங்க வேண்டியும் கிரியைகள் சிறப்புற அமையவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்**
**யாழ்.மாவட்டம்.**

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் 12.02.2016 அன்று நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி வலம்புரிப் பத்திரிகையில் வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் முதன்முதல் நான்கு கோபுரங்களைக் கொண்ட பெருமையைத் தன்னகத்தே கொண்ட ஆலயமாக காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் விளங்குகின்றது. அத்துடன் இவ்வருடம் இவ்வாலயம் உருப்பெற்று நூற்றாண்டாக அமைந்ததும் பெருமைக்குரியதே. வாரி வாரி வழங்கும் கற்பக விநாயகனின் அருட் கடாட்சத்தினால் காரை மண் புனிதம் பெற்றுள்ளது. இவ்வாலயத்தில் கலை யம்சம் பொருந்திய விநாயகரின் அற்புதங்கள் சிற்பங்களாகவும் சித்திரங்களாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமை பிரமிக்க வைத்துள்ளது. ஆகம விதி முறைகளுக்கு அமைவாக அமையப்பெற்ற இவ்வாலயத்தின் சூழல் அடியவர்கள் மனநிறைவாக வணங்கக் கூடியவகையில் அமைதியாக உள்ளமை பெரும் சிறப்பாகும். எனவே அனைத்தும் தன்னகத்தே அடக்கம் என்ற உன்னதமான தத்துவத்தின் பொருளாக விளங்கும் வாரிவளவு கற்பக விநாயகரின் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்ளும் அடியவர்கள் அனைவருக்கும் சித்திகள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என வாரிவளவு கற்பக விநாயகனின் பாதார விந்தங்களை வேண்டுவதுடன் சிறப்பாக ஆலயத்தினை வழிநடாத்தும் நிர்வாகத்தினையும் பாராட்டி இம்மலர் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி தேவந்தினி பாபு**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம்,காரைநகர்.**

(நி-37377)

E.S.P. & Company
Importers & General Hard ware merchants, No.41, Adbul Jabbar Mawatha, Colombo-12. Tel:- 011 243 4699

44

# ஆழ ஊடுருவும் அணியின் மறைக்கப்படும் ரகசியங்கள்



இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கோரும் விபரங்களை அவரிடம் கையளிக்கப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை அண்மையில் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த ஜனாதிபதியிடம் மூன்று விடயங்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி எழுப்பியிருந்தார் வைஸ் அட்மிரல் சரத் வீரசேகர.

இவர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் பிரதியமைச்சராக இருந்தவர். கடற்படையில் பணியாற்றிய இவர் சிவில் பாதுகாப்பு படையின் தளபதியாக இருந்தவர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் கடுமையான இனவாதத்தைக் கக்கி பிரசாரம் செய்த இவர் தோல்வி அடைந்திருந்தார். இவர் எழுப்பிய முதலாவது கேள்வி பிரகீத் எக்னெலிகொட வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள புலனாய்வு அதிகாரிகள் பற்றியது.

இரண்டாவது கேள்வி இலங்கை இராணுவத்தின் படைப்பிரிவுகள் மற்றும் போரின் போதான அவற்றின் நடவடிக்கைகள் பற்றி ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கோரியுள்ள விபரங்கள் பற்றியது.

மூன்றாவது கேள்வி அரசியலமைப்பு மாற்றத்தில் ஒற்றையாட்சிக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது பற்றியது.

இதில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சயிட ராட் அல் ஹூசைன் கோரியிருந்த இராணுவ நடவடிக்கை தொடர்பான விபரங்கள் குறித்த கேள்விக்குப் பதிலளித்த போதே ஜனாதிபதி அவ்வாறான எந்தத் தகவல்களும் வழங்கப்படாது என்று உறுதியளித்திருந்தார்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கில் மூன்றாவது இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கிரித்தல முகாமில் உள்ள ஆவணங்களை நீதிமன்ற விசாரணைகளுக்கு ஒப்படைக்க மறுக்கும் இராணுவத்துக்கும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ‘கோரியுள்ள விபரங்களை ஒப்படைக்க மாட்டேன்’ என்று மறுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பெரிய வித்தியாசங்கள் இருப்பதாக கூறமுடியாது.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தகவல்களை வெளியிட மறுப்பதற்கு முக்கியமான காரணம் ஒன்று உள்ளது. அவ்வாறு ஆவணங்கள், தகவல்களை வெளியிட்டால் போர் தொடர்பாக இன்னும் வெளிவராத பல ரகசியங்கள் வெளிப்பட்டுவிடும் என்பது தான் அந்தக் காரணம்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கோரயிருந்த விபரங்களில் முக்கியமானது போரின் போது இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியின் செயற்பாடுகள் குறித்த விடயம்தான்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் திருப்பங்களை ஏற்படுத்தி படைத்தரப்பை வெற்றியை நோக்கிக் கொண்டு சென்றதில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி முககிய பங்கை வகித்திருந்தது.

LRRP அல்லது LRP என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட இந்த ஆழ ஊடுருவும் அணி மூன்றாம் கட்ட ஈழப் போரின் பிற்காலத்தில் - 2000 ஆண்டுகளின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது. முதலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிழக்கு மாகாணத்தில் தொடங்கிய இதன் நடவடிக்கைகள் பின்னர் வவுனியாவுக்கு வடக்கே விரிவாக்கப்பட்டது. வான் புலிகள் படைப்பிரிவை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றிய கேர்ணல் சங்கர் புதுக்குடியிருப்புக்கு அருகே 2001 செப்ரெம்பர் 26 ஆம் திகதி இந்தப் படைப்பிரிவின் தாக்குதலில்தான் கொல்லப்பட்டார்.

அதற்குப் பின்னர்தான் இந்தப் படைப்பிரிவு பற்றிய தகவல்கள் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கின.

நான்காவது கட்ட ஈழப் போர் வெடிப்பதற்கு முன்னரே இரண்டு தரப்பும் நிழல் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தன. அப்போது வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்குள் முழங்காவிலையும் தாண்டிச் சென்று தாக்குதல் நடத்தும் அளவுக்கு இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணிகள் வலுவுடன் இருந்தன.

விடுதலைப் புலிகளின் பல முக்கிய தளபதிகள் இந்த அணியின தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். அவர்களில் கடற்புலிகளின் தளபதி லெப்.கேர்ணல் கங்கை அமரன், வட போர்முனைத் தளபதிகளில் ஒருவராக இருந்த லெப்.கேர்ணல் மகேந்தி, இராணுவ புலனாய்வுத்துறை தளபதி கேர்ணல் சார்ள்ஸ் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

இந்த அணியின் தாக்குதல்களில் இருந்து தப்பியவர்களில் பிரிகேடியர்கள் தமிழ்ச் செல்வன், சொர்ணம், பால்ராஜ், ஜெயம் போன்றவர்களும் அடங்கியிருந்தனர்.

நான்காவது கட்ட ஈழுப்போரில் ஆழ ஊடுருவும் படையணி புலிகளின் பிரதேசத்திற்குள் ஊடுருவி தகவல்களையும் சேகரித்தது. அதேவேளை தாக்குதல்களையும் நடத்தியது. இதனால் முன்னரங்கப் பாதுகாப்பில் புலிகளால் முழுக் கவனத்தையும் செலுத்த முடியாமல் உள்ளகப் பாதுகாப்பின் மீது கவனம் செலுத்தவும் அதற்காக கூடுதல் வளங்களை ஒதுக்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது புலிகளுக்குத் தலைமை மற்றும் தளபதிகளின் பாதுகாப்பின் மீதும் அதீத அக்கறை செலுத்த வேண்டி இருந்தது. அதைவிட தமது பிரதேசத்திற்குள் போருக்கான தயார்படுத்தல்களை சுதந்திரமாக முன்னெடுக்க முடியாத நிலையும் புலிகளுக்கு ஏற்பட்டது.

பின்தளம் மற்றும் கட்டளைத் தலைமை பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி புலிகளின் கவனத்தை முன்னரங்கின் மீது ஒன்று குவிய விடாமல் செய்ததில் ஆழ ஊடுருவும் அணியின் பங்கு அபரிமிதமானது.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் பிரமுகர்கள் மட்டும் சிக்கினர் என்று கூறமுடியாது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் போன்றவர்களும், பாடசாலை மாணவர்களும் கூட இத்தகைய கிளைமோர் தாக்குதலகளில் சிக்கியிருந்தனர்.

அதற்கு ஆழ ஊடுருவும் அணி மீது புலிகள் குறறம் சாட்டியிருந்தனர். எனினும் இராணுவத்தரப்பு அப்போது அதனை நிராகரித்திருந்தது.

போர் நடந்து கொண்டிருந்த போது மட்டுமன்றி போர் முடிந்த பின்னரும் கூட ஆழ ஊடுருவும் அணி என ஒன்று இலங்கை இராணுவத்தில் கிடையவே கிடையாது என்று இராணுவத் தரப்பு கூறி வந்தது.

அதற்கு முக்கியமான காரணம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்த தாக்குதல்கள் அனைத்துக்கும் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதுதான். எனினும் 2012 முதன்முறையாக ஆழ ஊடுருவும் அணியின் கட்டளை அதிகாரியாக இருந்து கேர்ணல் லலித் ஜயசிங்கவுக்கு வீரவிக்ரம விபூசண என்ற உயர் விருது வழங்கப்பட்ட போது இந்த இராணுவ அணியை அரசாங்கம் முதன்முறையாக ஒப்புக்கொண்டது.

லெப். கேர்ணல் லலித் ஜயசிங்கவும் கூட புலிகளின் கட்டுப்பாட்டிலருந்த ஒட்டிசுட்டான் பகுதியில் ஊடுருவித் தாக்கி விட்டுத் திரும்பிய போது தான் புலிகளின் தாக்குதலில் சிக்கிப் பலியாகியிருந்தார்.

எவ்வாறாயினும் இந்த ஆழ ஊடுருவும் அணி பற்றிய பெருமளவு ரகசியங்களை இராணுவத் தரப்பு இன்னமும் மறைத்தே வைத்திருக்கிறது.

கடந்த வாரம் இந்த ஆழ ஊடுருவும் அணியை உருவாக்கியது பற்றிய சில தகவல்களை இராணுவத் தலைமையகம் வெளியிட்டிருக்கிறது.

மேயர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க பற்றி இராணுவத் தலைமையகம் வெளியிட்ட செய்தியில்தான் இந்தத் தகவல்கள் இடம்பெற்றிருந்தன.

கடந்த மாதத் தொடக்கத்தில் இடம்பெற்ற இராணுவக் கட்டளை அமைப்பு மாற்றத்தின் போது யாழ். படைகளின் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்ட மேயர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க கடந்த மாதம் 28 ஆம் திகதியே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்.

மேயர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவுக்கும் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணிக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உள்ளது.

மேயர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஆரம்பத்தில் பொறியியல் படைப்பிரிவில் தான் இணைந்திருந்தார். எனினும் 1989 ஆம் ஆண்டு இவர் தானாகவே முன்வந்து விசேட படைப்பிரிவில் இணைந்து கொண்டார்.

விசேட படைப்பிரிவின் முதலாவது பற்றாலியனில் ஒரு ஸ்குவாட்றன் தளபதியாக இருந்த இவர் பின்னர் ஆழ ஊடுருவும் அணியை உருவாக்கும் திட்டத்துடன் மூன்றாவது விசேட படைப்பிரிவு பற்றாலியன் உருவாக்கப்பட்ட போது அதன் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.

இந்த விபரங்களை இப்போது வெளியிட்டுள்ளது இராணுவத் தலைமையகம்.

அதாவது இராணுவத்தின் மூன்றாவது விசேட படைப்பிரிவு பற்றாலியன் ஆழ ஊடுருவும் படையணி கருத் திட்டதுடன் உருவாக்கப்பட்டது என்பதை இராணுவத் தரப்பு இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் இந்த ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல்கள் செயற்பாடுகள் பற்றிய விபரங்களை ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் வழங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார்.


அரசாங்கமும் இராணுவத் தரப்பும் கூறுவது போன்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெளிப்படைத் தன்மையுடன்தான் நடத்தப்பட்டது. என்றால் சர்வதேசப் போர் நியமங்களுக்கு ஏற்ப மனித உரிமைகளை மதித்தே நடத்தப்பட்டது என்றால் எந்த ரகசியத்தையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை.

இலங்கை இராணுவம் போரில் வெற்றியைப் பெற்று விட்டது. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லை. இப்படியான நிலையில் ரகசியங்களை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனாலும் இராணுவத்தின் ஒரு கரந்தடிப்படைப் பிரிவாக செயற்பட்ட படையணியின் ரகசியங்களை அரசாங்கம் மறைக்க முற்படுகிறது என்றால் அதன் அரத்தம் என்ன?

**சுபத்ரா**

# முல்லை.மாவட்ட மரதன் ஓட்டப் போட்டி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முதலிடம்







முல்லைத்தீவு மாவட்ட மரதன் ஓட்டப் போட்டியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த புலேந்திரன் ஜெனந்தன் ஆண்கள் பிரிவிலும் யோகேஸ்வரன் புவேந்தினி பெண்கள் பிரிவிலும் முதலாமிடங்களைப் பெற்றுள்ளனர்.

மாவட்டசெயலகம்முன்பாககடந்த 6 ஆம் திகதி காலை 7 மணியளவில் மாவட்ட விளையாட்டு அலுவலர் என். முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 25 வீரர்களும் பெண்கள் பிரிவில் 18 வீராங்கனைகளும் பங்குபற்றினர்.

ஆண்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட 12 கிலோ மீற்றர் தூரத்தினை 20 வீரர்கள் ஓடி முடித்தனர். பெண்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட 8 கிலோ மீற்றர் தூரத்தை 16 வீராங்கனைகள் ஓடி முடித்தனர்.

இந்தப் போட்டியிலே ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த புலேந்திரன் ஜெனந்தனும் இரண்டாமிடத்தை கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவை சேர்ந்த மகேஸ்வரன் குமுதன், மூன்றாமிடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவை சேர்ந்த செங்கோல் அலெக்ஸ் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியிலே முதலாமிடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த யோகேஸ்வரன் புவேந்தினி, இரண்டாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுடர்மதி,மூன்றாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த சிவனேஸ்வரன் டிலக்சனா பெற்றுக் கொண்டனர்.


வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன்,வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் விருந்தினர்கள் வழங்கி வைத்தனர். (க-281)





## அகில இலங்கை பல்கலைக்கழக 2015 இற்கான சிறந்த வீரராக

### யாழ்.வீரர் ஞானரூபன் தெரிவு



அகில இலங்கை பல்கலைக்கழக 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரரை தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் "Most Popular University Sports Star 2015" எனும் போட்டியில் எம் யாழ். பல்கலைக்கழக வீரன் செபமாலை நாயகம் ஞானரூபன் (ஞானம்) 5481 வாக்குகளை பெற்று, 2283 வாக்குகளால அபார வெற்றி பெற்றுள்ளார்.

இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ள 16 வீரர்களில் ஒரே ஒரு தமிழ் வீரன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இளவாலை யங்கென்றிஸ், யாழ்.பல்கலைக் கழகம், யாழ். மாவட்டம், வட மாகாணம், அநுராதபுர சொலிட் மற்றும் இலங்கை தேசிய அணி போன்ற அணிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை குறிப்பிடத் தக்கது. (க)

## ஆஸி.கூடைப்பந்தாட்ட பயிற்சியாளர் யாழில்

அவுஸ்திரேலிய நாட்டின் கூடைப் பந்தாட்டப் பயிற்றுநர் டமைன் கொட்டர் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ். மாவட்ட கூடைப்பந் தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந் தாட்ட திடலில் இடம்பெறும் கூடைப் பந்தாட்ட பயிற்சி முகாமில் பங்கு பற்றி பயிற்சிகளை வழங்குகின்றார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு பயிற்சி வழங்கிய இவர் நேற்று யாழ். மாவட்ட பாடசாலைகளின் அணிகளுக்கு பயிற்சி வழங்கினார். (க)

## அமரர் கமலாவதி சந்திரகாந்தன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து வருடாவருடம் நடத்தும் பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் உப அதிபருமாகிய அமரர் கமலாவதி சந்திரகாந்தன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியானது எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் வடக்கு மாகாண பாடசாலை 20 (1997 உம் அதற்குப் பின்னரும்) வயதிற்குட்பட்ட அணிகள் தங்கள் பதிவுகளை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும். தங்கள் பதிவுகளை உறுதிப் படுத்த 077 926 5259, 077 393 1446 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (க)

## ஊரெழு றோயல் விளையாட்டு கழகம் வடமாகாண ரீதியிலான உதைபந்து

### செ ன்.அன்ரனீஸ் வெற்றி



ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தின் வடமாகாண ரீதியிலாக நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்திற்கு எதிரான போட்டியிலேயே 2:1 என்ற கோல் கணக்கில் மன்னார் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

பருத்தித்துறை லாரி பேர்ஸ் மற்றும் புலோலியூர் இளந்தளிர் விளையாட்டுக்கழகங்கள் இணைந்து நடத்தும் கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் மேற்படி போட்டி நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியானது ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புலோலி வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு 8 பேர் 6 ஓவர்கள் கொண்டதாக போட்டி நடைபெறும். நுழைவுக் கட்டணமாக ரூபா ஆயிரம் அறவிடப்படுவதோடு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 261 0019, 011 968 7621, 077 834 3816 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முதல் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்களும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க)

## அரியாலை ஐக்கியம் வெற்றி

றோயல் வி.கழகம் நடத்தி வரும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் அரியாலை ஐக்கிய அணி வெற்றி பெற்றது.

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான விலகல் முறையிலான இந்தத் தொடரில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.றொக்ஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதிக் கொண்டது.

இதில் அரியாலை ஐக்கிய அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# மனித வெடிகுண்டுத் தாக்குதலில் சிக்கிய அகதிகள் 56பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(மைதுகுரி)

**வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள அகதிகள் முகாமில், இரண்டு பெண்கள் மனித வெடிகுண்டாக மாறி தற்கொலை தாக்குதல் நடத்தினர். இதில் 56 பேர் கொல்லப்பட்டனர்.**

நைஜீரிய நாட்டில் செயற்பட்டு வரும் போகோ ஹராம் இஸ்லாமிய கிளர்ச்சிய குழுக்களால் 20 ஆயிரம் மக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

2.5 இலட்சம் மக்கள் தங்களது வீடுகளை இழந்து அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர். இந்நிலையில், சுமார் 50 ஆயிரம் பேர் தங்கியிருந்த வடகிழக்கு நைஜீரிய பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் நுழைந்த இரண்டு பெண்கள் மனித வெடிகுண்டாக மாறி உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க செய்தனர். இதில் முகாமில் இருந்த சுமார் 56 பேர் கொல்லப்பட்டனர். 51 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 76 பேர் காயத்துடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

## பிரித்தானியாவை புரட்டிய இமோஜின் புயல் ஆயிரக்கணக்கான மக்கள் இருளில் தவிப்பு





(லண்டன்)

பிரித்தானியாவை தாக்கிய இமோஜின் புயல் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதால் வீட்டுக்குள்ளேயே முடங்கி போயுள்ளனர்.

பிரித்தானியாவின் தென் பகுதியில் கடந்த திங்களன்று மணிக்கு 100 மைல் வேகத்தில் இமோஜின் புயல் தாக்கியது.

இதன் காரணமாக பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த புயல் காரணமாக 60 அடி உயரத்துக்கு கடல் அலைகள் எழும்பின.

மேலும் வேல்ஸ் மற்றும் இங்கிலாந்தில் 50க்கு மேற்பட்ட வெள்ள அபாயமும் 180க்கும் மேற்பட்ட எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

96 மைல் வேகத்தில் சூறைக்காற்று வீசியதால் மின்கம்பங்கள் மற்றும் வீதியோர மரங்கள் சாய்ந்து விழுந்தன. கார்கள் மண்ணில் புதைந்து போயின.

சில பகுதிகளில் வீடுகளின் கூரை காற்றில் பெயர்ந்து போனது. இதனால் கார்ன்வால் மற்றும் டெவன் பகுதியில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருளில் மூழ்கியுள்ளனர். (இ)

## மது விருந்தில் கலந்து கொண்ட 6 பெண்களுக்கு 300 கசையடி

சவுதி அரேபியாவில் மது விருந்தில் கலந்து கொண்ட 6 பெண்கள் உள்ளிட்ட 11 பேரை பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சவுதியில் மது அருந்த தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள கடற்கரை குடியிருப்பு ஒன்றில் மது விருந்து நடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த சிறப்பு பொலிஸார், அங்கு மது போத்தல்களுடன் ஆபாச வீடியோ பதிவுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

அந்த குடியிருப்பின் அருகாமையில் வசித்து வரும் நபர்கள் சிறப்பு பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.

மது அருந்தியிருந்த சிலர் கைது நடவடிக்கையை எதிர்த்து அப்போது குரல் எழுப்பியதாக கூறப்படுகிறது. மது மற்றும் ஆபாச படங்களுக்கு சவுதியில் தடை இருந்து வரும் நிலையில் இதுபோன்ற விருந்தை பெரு வணிகர்களின் அல்லது உயர் அதிகாரிகளின் பிள்ளைகள் மட்டுமே நடத்தியிருக்கலாம் என கூறப்படுகிறது.

கைது செய்த நபர்களை பொலிஸார் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததை அடுத்து அவர்களுக்கு ஓராண்டு சிறை தண்டனையும் தலா 300 கசையடியும் வழங்க உத்தர விட்டுள்ளனர். சவுதி சட்டத்தின்படி உறவினர்களுடன் அல்லாமல் பெண்களை வேறு ஆண்களுடன் பழக அனுமதிப்பதில்லை.

கடந்த 2002 ஆம் ஆண்டு மெக்கா பகுதியில் தீக்கிரையான பாடசாலையில் இருந்து தலையை உரிய முறையில் மூடாத காரணத்தால் மாணவர்கள் வெளியேற அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த முடிவின் காரணமாக அந்த பாடசாலையில் தீ விபத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்தது குறிப்பிடத்தக்கது. (இ)




## இறந்த குழந்தை

## இறுதிச் சடங்கின் போது உயிர் பிழைத்த அதிசயம்

சீனாவில் இறந்த குழந்தை இறுதி சடங்கின் போது உயிர் பிழைத்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.


சீனாவில் ஷைஜியங் மாகாணத்தில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் குறை பிரசவத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. எனவே, அக்குழந்தையை வைத்தியசாலையில் உள்ள இன்குபெட்டர் கருவியில் 23 நாட்கள் வைத்து பாதுகாக்கப்பட்டது. சிறிது உடல் நலம் தேறியதும் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சென்றதும், குழந்தையின் உடல் நிலை மோசம் அடைந்தது. எனவே, மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சிகிச்சை அளித்தனர். இதய துடிப்பு நின்றதால் அக்குழந்தை இறந்து விட்டது.

அதை தொடர்ந்து அக்குழந்தையின் உடல் துணிகளால் 2 அடுக்கு சுற்றப் பட்டு பாதுகாப்பாக கட்டப்பட்டு வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டது. அங்கு சுமார் 15 மணி நேரம் வைத்திருந்தனர். பின்னர் குழந்தையின் உடலை புதைப்பதற்கு முன்பு இறுதி சடங்குகள் செய்யப்பட்டன. அப்போது அந்த குழந்தையின் உடலில் அசைவு தெரிந்தது.

மேலும் வேதனை கலந்த குரலில் அக்குழந்தை முணங்கியது. இதனால், ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்த பெற்றோர் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த வைத்தியர்கள் குழந்தை மீண்டும் உயிருடன் இருப்பதாக கூறினர்.

இந்த தகவலை கேட்டதும் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (இ)

## மூழ்கிய டைட்டானிக்கின் மறுவடிவம் 2018ம் ஆண்டில் கடலில் பயணிக்கும்



106 ஆண்டுகளுக்கு முன்பு பனிப்பாறையில் மோதி கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலை மறுவடிவமாக உருவாக்கப்பட்ட கப்பல் வரும் 2018ஆம் ஆண்டு கடல் பயணத்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தின் சவ்தாம்ப்டன் நகரில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு ஏப்ரல் 10ஆம் திகதி 2 ஆயிரத்து 224 பயணிகளுடன் ஆர்எம்எஸ் டைட்டானிக் என்ற கப்பல் தனது முதல் பயணத்தை தொடங்கியது.

ஆனால் வழியில் பனிப்பாறை ஒன்றின் மீது மோதி ஏப்ரல் 15ஆம் திகதி அதிகாலையில் கடலில் மூழ்கியது.

இதில் கப்பலில் இருந்த பயணிகள், மாலுமிகள், கப்பல் ஊழியர்கள் உள்ளிட்ட ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர். இதில் வெகு சிலரே கப்பலில் இருந்த உயிர் காக்கும் மிதவைகள் மூலம் உயிர் பிழைத்தனர். மூழ்கிய கப்பலின் பாகங்களை கண்டு பிடித்து அவற்றை பாதுகாத்து வருகின்றனர்.

இதன் அடிப்படையிலும், உயிர் பிழைத்தவர்களின் தகவல்களை கொண்டும் டைட்டானிக்-II கப்பலை உருவாக்கி வருகின்றனர். இந்த கப்பல் 270 மீற்றர் நீளமும், 53 மீற்றர் உயரமும் 40 ஆயிரம் தொன் எடையும் கொண்டதாக இருக்கும்.

இதில் போதுமான அளவுக்கு உயிர்காக்கும் மிதவைகள் இருக்கும். அவுஸ்திரேலியாவின் கோடீஸ்வரர் கிளைவ் பால்மர் மற்றும் அவரது புளுஸ்டார் லைன் நிறுவனம் இணைந்து இதை உருவாக்கி வருகிறது.

கடலில் மூழ்கிய கப்பலைப் போன்றே இதிலும் முதல், இரண்டாம், 3ம் வகுப்பு டிக்கெட்டுகள் இருக்கும். 9 அடுக்குகளை கொண்ட இக்கப்பலில், 840 கேபின்கள் இருக்கும் அதில் 2,400 பயணிகளும், 900 கப்பல் ஊழியர்களும் தங்கலாம்.

இத்துடன் கப்பலில், நீச்சல் குளம், டர்கி பாத் எனப்படும் நீராவி குளியல், மசாஜ், ஜிம் வசதிகளும் இருக்கும். டைட்டானிக்-II கப்பலில் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். இதன் முதல் பயணம் 2018ஆம் ஆண்டு கிழக்கு சீனாவிலுள்ள ஜியாங் சூ என்ற இடத்தில் இருந்து டுபாய் வரை இருக்கும் என்று கப்பல் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

கீழ்த்தரமான சிந்தனைகளை எந்த சூழ் நிலையிலும் நினைக்க வேண்டாம்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தென்பகுதியில் கருக்கட்டும் குழப்பம் தமிழருக்கான தீர்வைத் தாக்கும்

2016ஆம் ஆண்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் நம்பியிருக்கும் வேளையில், தென்பகுதி அரசியலில் குழப்பங்களும் குத்துக்கரணங்களும் நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலின் முடிவு தனக்குத் தோல்வியாக அமைந்தபோது ஆட்சி அதிகாரத்தை கைவிட்டுப் போக மனம் இல்லாதிருந்த மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பி வைத்து ஆட்சி பீடத்தைத் கைப்பற்றுவதில் தற்போதைய அரசு மிகவும் கவனமாக நடந்து கொண்டது.

ஆ... ஊ... என்று சத்தம் வைக்காமல் அப்பு! ராசா என்ற அணுகுமுறைக்கூடாக மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி வைத்து மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

ஜனாதிபதிப் பதவியில் மைத்திரி; பிரதமர் பதவியில் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய ஆட்சி உருவான போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கக்கூடிய கணிசமானவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பக்கமே இப்போதும் உள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, ஜனாதிபதிப் பதவியில் மைத்திரி இருக்கின்ற போதிலும் தனது கட்சிக்காரர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் அவரின் இறுக்கம் போதாது என்பது பொதுவான கருத்து.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டமை மகிந்த ராஜபக்ஷவுக்கு தீராத கவலையைக் கொடுத்தது.

அது மட்டுமன்றி தனது துணைவியார் சிராந்தி ராஜபக்ஷ விசாரணைக்காக அழைக்கப்பட்டமை மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த உலகையே வெறுக்கச் செய்தது. இதனால் இடியேறு கேட்ட நாகம் போலான மகிந்த ராஜபக்ஷ இந்த ஆட்சியை நிர்மூலமாக்குகிறேன் பார் என்று களமிறங்குகிறார்.

விடுதலைப் புலிகளை போரில் வென்றவர் என்ற மதிப்பு இன்னமும் மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கவே செய்கிறது.

இதனால் சிங்கள மக்களில் கணிசமானவர்களை தனக்கு ஆதரவாகத் திரட்டி அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்கின்ற முயற்சியில் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எதுவாயினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒவ்வொரு அசைவையும் அமெரிக்கா மிக உன்னிப்பாக கவனித்து வருகிறது என்பது ஜனாதிபதி மைத்திரிக்கு இருக்கக்கூடிய பலம்.

இது தவிர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகச் சிறந்த ராஜதந்திரி என்பதால் மகிந்த ராஜபக்ஷவின் கோபாவேசத்தை அடக்க அல்லது தணிக்கக்கூடிய நடவடிக்கை எடுப்பார் என்பதும் உண்மை.

எது எப்படியாயினும் தென்பகுதியில் எழக்கூடிய குழப்பங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்கான தீர்விலேயே தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மட்டும் உண்மை.

அதாவது, தென்பகுதி அரசியலில் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாங்கள் தருகின்ற அல்லது தந்த அதிகாரங்களுடன் தமிழ் மக்கள் அமைதியாக இருப்பதே நல்லது.

அதை மீறி சமஷ்டி-சுயாட்சி, வடக்குக் கிழக்கு இணைவு என்று கேட்டால் எதுவும் தர முடியாத நிலைமை ஏற்படும் என்ற எச்சரிக்கையை நல்லாட்சி விடும்.

சில வேளைகளில் 2016 என்ற சம்பந்தர் ஐயாவின் கனவு படுதோல்வியில் முடிந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் நிகழ்வு நாளை

ஏழு கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது தொடக்கவுரையினை ஏழு கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் ந.மயூரரூபன் நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையினை பேரவையின் காப்பாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் நிகழ்த்தவுள்ளார். நினைவுரைகளை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம், யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அனுபவ உரைகளை கவிஞர் வேலணையூர் சுரேஸ், ஊடகவியலாளர் இளங்கீரன், ஏழு கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கை.சரவணன ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

# கழிவுகள் கழிக்கப்படாது

நெல்லியடிச் சந்தையில் உள்ளூர் விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கின்றபோது கழிவுகள் கழிக்கப்படமாட்டாது என கரவெட்டிப் பிரதேச சபையினரால அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தையின் நுழைவாயினுள் வியாபாரிகளது பார்வைக்காக அறிவித்தல் பலகை ஒன்றும் வைககப்பட்டுள்ளது. உள்ளூர் வியாபாரிகள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கின்றபோது 10 கிலோவுக்கு ஒரு கிலோ வீதம் கழிக்கப்பட்டே வியாபாரிகளால் மரக்கறிகள் வாங்கப்படுகிறது. இதேவேளை வெளியூரில் இருந்து வரும் மரக்கறிகளுக்கு எந்தவொரு கழிவுகளும் வழங்கப்படுவதில்லை. இதனால் உள்ளூர் வியாபாரிகள் தம்து விற்பனையில் நட்டத்தினையே எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக கரவெட்டிப் பிரதேச சபையன் கவனத்திற்கு கொண்டு செல்லபட்ட பின்னர் பிரதேச சபையினால் மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச சபையால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலை சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்யும் வியாபாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச சபை அறிவித்துள்ளது. (இ-5-60)

# இந்திய மீனவர்கள் 12 பேர் தலைமன்னார் கடற்பரப்பில் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேலும் இந்திய மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தய இரண்டு ரோலர் படகுகளையும கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் நேற்று வியாழக்கிழமை நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (2-3)

# கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதி திருக்கோவில் பலாலய கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ள இக்கும்பாபிஷேகத்தில் திரவ்யாபிஷேகம், பூர்ணா குதி இடம்பெறும். (இ)

# நுழைவாயில் திறப்புவிழா

யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் நுழைவாயில் திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வினை தொடர்ந்து நாவாந்துறை புனித லூர்து, அன்னையின் கெபி திறந்து அர்ச்சித்து முதல் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ-5)

# இறைச்சிக்காக மாடு வெட்டியோர் பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம்

(கரணவாய்)

இறைச்சிக்காக மாடு வெட்டியோர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியுள்ளதுடன் வெட்டப்பட்ட இறைச்சியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கரவெட்டி ஞானாசாரியார் வீதியில் அமைந்துள்ள வேரூண்டி மயானத்துக் கருகில் உள்ள பற்றை ஒன்றில் இருந்தே நேற்று அதிகாலை 4 மணியளவில் இறைச்சி கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

பொலிஸாரைக் கண்டதும் மாடு வெட்டியோர் தப்பியோடியுள்ளனர்.

மாட்டிறைச்சி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் அவ்விடத்திலே இறைச்சி எரிக்கப்பட்டது. (இ-5-60)

# இன்னிசை கச்சேரி

வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தி வருகின்ற வாராந்த ஆன்மீக நிகழ்வுகளின் வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (இ-5-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 13.02.2016 சனி யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி, மயிலங்காடு, குப்பிளான், தூதாவளை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் வலைஞர்மடம், புதுமாத்தளன், சிலாவத்தை, உடுப்புக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, மாமடுவிலிருந்து பொகஸ்வேவ வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக்கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## அறிவாளியாகச் செயற்படுங்கள்

★ போதுமென்ற மனப்பான்மை உள்ளவனாக இரு. மக்களில் நீயே நன்றியுள்ளவன்.

★ மனத்தை அடக்கியாண்டு மறுமைக்கு பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி.

★ மனம் போன போக்கில் நடந்து கொண்டு இறைவன் அருளை எதிர் பார்ப்பவன் முட்டாள்.

★ ஒரு காரியத்தை நீர் செய்ய விரும்பினால், அதன் முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நல்லதாக இருந்தால் அதைச் செய்வீர்.

★ சுகபோகம் தேடும் நோக்கத்துடன் மார்க்கத்தை பயன்படுத்தாதீர்கள். அது மார்க்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும்.

★ திருக்குர்ஆனை சுமப்பவர்களு க்கும், அறிவுத்துறை பயிற்சியாளர்களுக்கும் எதிராக் உமது நாவை பயன்படுத்தாதீர்கள். ஏனென்றால் நரகத்தில் நாய்கள் உம்மைத் தாக்கக் கூடும்.

★ பழித்துரைத்தல், ஒழுக்கம் கெட்ட முரட்டுத்தனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும்.



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## பற்றுக்கள்

பற்றுக்கள் பதற்றமான மூச்சிற்குக் காரணமாகின்றன. பதற்றமான மூச்சு மனதை அமைதியற்றுப் போகச் செய்கிறது. அப்போது நீங்கள் சிதைந்து சின்னாபின்னமாகின்றீர்கள். துன்பத்திற்கு இரையாகின்றீர்கள்.

நீங்கள் அதிகமாகச் சிதைந்து சிதறிப் போவதற்கு முன் சாரணாகதி, சாதனை (ஆன்மீகப் பயிற்சிகள்) மூலமாக உங்களை ஒருநிலைப்படுத்திக் கொண்டு பதற்றமான மூச்சை விரட்டுங்கள். துரதிர்ஷ்டவசமாக நம்மில் பலர் மிகவும் காலம் தாழ்ந்து போகும்வரை இதனைக் கவனிப்பதில்லை.

ஒருவர் பற்றுக்கள் எனும் பெருங்கடலில் சிக்கி மூழ்கும்வேளையில் சரணாகதி எனும் உயிர்காக்கும் உயிர்ச்சட்டை (Life Jacket) அணிந்து மீட்புக்குழு வரும் வரை காத்திருக்கலாம். பற்றுக்களுடன் எதிர்த்துப் போரிடாமல் அந்தப் பதற்றமான மூச்சைக் கூர்ந்து கவனியுங்கள். உங்களுக்குள் உள்ள மௌனம் எனும் குளிர்ந்த இடத்திற்குச் செல்லுங்கள்.

இதற்கான முதற்படி நீங்கள் உங்கள் பற்றுக்களை ஞானத்தின்பால், இறைவனின் பால் திருப்புவதுதான்.

உலகாயத விடயங்களில் பற்றற்று இருப்பதே- உங்களின் மோகனம் (பேரழகு)

இறைவனிடம் நீங்கள் கொண்டுள்ள பற்றே- உங்களுடைய அழகு.

# தமிழ் சினிமா வரலாறு

## 98 பாட்டு - நடனம் இல்லாத முதல் படம் அந்தநாள்

நாடகம் வெற்றிகரமாக அமைந்த அளவுக்கு படம் வெற்றிகரமாக வரவில்லை. அண்ணா எழுதிக் கொடுத்ததை நாங்கள் திருத்தி அமைத்ததாலோ, இதுதான் சினிமாவுக்கு ஒத்துவரும் என்று எங்கள் டைரக்டர் நினைத்ததினாலோ, எதிர்பார்த்த அளவுக்கு அந்தப் படம் வெற்றி தரவில்லை. ஆயினும் நல்ல படமாகவே அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.


### பாரதியார் பாடல்கள் அரசுடைமை

இதற்கிடையே 1949 ஜூன் மாதத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், ஏவி.மெய்யப்ப செட்டியாரை அழைத்துப் பேசினார்.

பாரதியார் பாடல்களின் உரிமையை நீங்கள் வாங்கி வைத்திருப்பதாக அறிந்தேன். பாரதியார் போன்ற தேசிய மகாகவியின் பாடல்கள் நாட்டின் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். நீங்கள் எவ்வளவு ரூபாய் கொடுத்து வாங்கியிருந்தாலும் சொல்லுங்கள். அந்தப் பணத்தை அரசாங்கத்திலிருந்து கொடுத்து விடுகிறோம் என்று கூறினார் முதலமைச்சர்.

ஏவி.எம். கொஞ்சம் கூட தயங்காமல் பாரதியார் பாடல்களின் உரிமையை இந்தக் கணமே அரசாங்கத்துக்கு கொடுத்துவிடுகிறேன். அதற்காக ஒரு ரூபாய் கூட வேண்டாம். எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இதைச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று பதில் அளித்தார்.

இதன்படியே பாரதியார் பாடல் உரிமையை அரசாங்கத்துக்கு மாற்றி முறைப்படி பத்திரம் எழுதிக் கொடுத்தார். இதற்காக தலைவர்களும் பிரமுகர்களும் ஏவி.எம்.முக்கு பாராட்டு தெரிவித்தனர்.



அந்த நாள் படத்தில் சிவாஜிகணேசன்

பின்னர் 1953 இல் பெண் என்ற படத்தை ஏவி.எம். தயாரித்தார். இதே கதை, லட்கி என்ற பெயரில் இந்தியிலும், சங்கம் என்ற பெயரில் தெலுங்கிலும் ஒரே நேரத்தில் தயாரிக்கப்பட்டது.

ஒரே சமயத்தில் ஒரே கதையை மூன்று மொழிகளில் எடுப்பதால் செலவு மிச்சமாகும் என்று கருதியே இந்த முறை கையாளப்பட்டது. மூன்று மொழிகளிலும் வைஜயந்திமாலா தான் கதாநாயகி.

தமிழ்ப் படத்தின் கதாநாயகனாக ஜெமினி கணேசன் நடித்தார். அவருக்குத் தோழனாக காமெடி வேடத்தில் எஸ்.பாலசந்தர் (பிற்காலத்தில் வீணை பாலசந்தர்) நடித்தார். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், பாலசந்தருக்காக, கல்யாணம்.... கல்யாணம்... என்ற படலை பின்னணியில் சந்திரபாபு பாடினார்.

அஞ்சலி தேவி, நாகையா ஆகியோரும் இதில் நடித்தனர்.

வாழ்க்கை படத்துடன் நேரடியாக டைரக்ட் செய்வதை ஏவி.எம். நிறுத்திக் கொண்டதால், இப்படத்தை எம்.வி. ராமன் டைரக்ட் செய்தார். தொழில் நுட்ப ரீதியில் இப்படம் சிறப்பாக அமைந்தபோதிலும் சுமாராகவே ஓடியது.

ஒரே சமயத்தில் 3 படங்களை எடுப்பதால் செலவு மிச்சமாகிறது என்று வீண் மனக் கோட்டை கட்டினோம். ஒரு படத்தை எடுத்து அதிலுள்ள குறைகளைத் திருத்தி பிறகு வேறு மொழிகளில் எடுக்க முயன்றிருந்தால் படம் வெற்றி அடைந்திருக்கும்.

*(தொடரும்)*

# நௌரு எதிர்கொண்டுள்ள புகலிடக்கோரிக்கையாளர்கள்!

நௌருவில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் அவுஸ்திரேலியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட புகலிடக் கோரிக்கையாளரான துர்க்கா, தான் மீண்டும் அத்தீவிற்கு அனுப்பப்பட்டால் எவ்வாறான பயங்கரங்களை அனுபவிக்க வேண்டிவரும் என்பது தொடர்பாகத் தெரிவித்தார்.




அவுஸ்திரேலியாவின் நௌருத் தீவில் தடுத்து வைக்கப்பட்ட கடந்த காலத்தில் பல்வேறு சித்திரவதைகள், வடுக்கள் மற்றும் பாலியல் வன்புணர்வு போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளரான துர்க்கா, மீண்டும் நௌருத் தீவுக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்கின்ற அச்சத்தில் உறைந்துள்ளார்.

'நௌருவிற்குத் திரும்பிச் செல்வதை நினைத்து நான் அச்சம் கொள்கிறேன். அங்கே எனது வாழ்க்கை பாதுகாப்பாக இருக்காது. நான் மீண்டும் நௌருவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டால், என் உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை' என பாதிக்கப்பட்ட துர்க்கா அவுஸ்திரேலிய குடிவரவுத் தடுப்பு முகாமிலிருந்து மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் தெரிவித்தார்.

72 மணித்தியால அறிவித்தலில் நௌருவிற்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்கின்ற நிலையிலுள்ள 72 சிறுவர்கள், அவுஸ்திரேலியாவில் பிறந்த 33 குழந்தைகள் உட்பட 267 புகலிடக் கோரிக்கையாளர்களில் துர்க்காவும் ஒருவராவார். 267 பேரில் சில புகலிடக் கோரிக்கையாளர்கள் மீண்டும் நௌருத் தீவுக்கு அனுப்பி வைக்கப்படக் கூடிய உயர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

தாங்கள் மீண்டும் நௌருவிற்கு அனுப்பி வைக்கப்பட்டால், தாக்கப்படக் கூடிய, சித்திரவதைகளுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக நேரும் எனவும் போதியளவு மருத்துவ வசதிகள் அங்கு இல்லை எனவும் புகலிடக் கோரிக்கையாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான துன்புறுத்தல்கள் மற்றும் ஆபத்தை எதிர்நோக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களில் துர்க்காவும் ஒருவராவார். இவர் 1996 இல் வடக்கில் உள்ள யாழ்ப்பாண நகரில் வைத்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர் என்கின்ற சந்தேகத்தின் பேரில் இராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

துர்க்கா 22 வயதாக இருந்த போது ஏனைய தமிழ் இளையோர்களைப் போலவே விடுதலைப் புலிகள் அமைப்பின் அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றிருந்தார்.

'ஆனால் நான் ஒருபோதும் விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளியாகச் செயற்படவில்லை. நான் அரசியல் பணிகளில் மட்டுமே ஈடுபட்டிருந்தேன்' என துர்க்கா தெரிவித்தார்.

'கர்ப்பிணியாக இருந்த போதிலும் நான் சித்திரவதைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகினேன்.

இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட போது எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. எவ்வித குற்றங்களும் முன்வைக்கப்படாது இரண்டு ஆண்டுகள் நான் தடுத்து வைக்கப்பட்டேன். இதன் பின்னர் நான் கொழும்பிற்குத் தப்பிச் சென்றேன். (தொடரும்)

**வழிமூலம் - The Guardian**
**ஆங்கிலத்தில - Ben Doherty**
**மொழியாக்கம் -நித்தியபாரதி**

## சுயாதீனமான...

தெரிவித்துள்ளார்.

யுத்த குற்ற விசாரணை தொடர்பில், இலங்கை அரசாங்கத்தின் மீது நாம் எதனையும் திணிக்கவில்லை. குறித்த விசாரணை தொடர்பில் இலங்கை ஜனாதிபதி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் எமது விருப்பத்தை தெரிவித்துள்ளோம். யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையில், சர்வதேச பங்களிப்புடன் கூடிய கலப்பு வகையான பொறிமுறையொன்றையே ஆரம்பத்திலிருந்து நாம் விரும்புகின்றோம்.

கடந்த காலங்களில் இலங்கை மேற்கொண்ட உள்ளக விசாரணைகளில், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கப்பெறாத நிலையில், அவர்கள் உள்ளக பொறிமுறை மீது நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

எனினும் இலங்கை அரசாங்கம் எந்த தீர்மானத்தை எடுத்தாலும், அதற்கு பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினரதும் ஆதரவு இருக்கும் பட்சத்தில், அதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

அத்தோடு, குறித்த விசாரணை பொறிமுறை பக்கச்சார்பற்றதாகவும் சுயாதீனமானதாகவும் இருக்க வேண்டியது அவசியம் என அவர் குறிப்பிட்டார். (செ-12)

## யானைக்குட்...

றப்புலானய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகிய சிரேஷ்ட வழக்குரைஞர் திலீபா பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் ஆணை மூலம் வழங்கப்பட்ட யானைகுட்டிகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளபட வேண்டியுள்ளது, குறிப்பாக இந்த யானைக் குட்டிகள் எவ்வாறு பெறப்பட்டன என்பது குறித்தே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது,

முன்னாள் ஜனாதிபதியின் ஆணையை தொடர்ந்து ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவை சேர்ந்த நெவில் வன்னியாராச்சி என்ற அதிகாரி மூலம் யானைக்குட்டிகள் வழங்கப்பட்டுள்ளன, இவற்றில் சில யானைகள் காணாமற் போயுள்ளன என அவர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## அமைச்சர்...

உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாக இன்றையதினம் வெள்ளிக்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள சிவில் சமூகத்தினருடனான கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தினை மேற்கொள்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சின் விசேட செயலணியினரால் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில், பொதுமக்கள் தமது கருத்துக்களை பதிவு செய்வதற்கான இணையத்தளமும் அமைச்சரால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (செ-9)

# கசிப்பு கடத்தியவர்கள் பொலிஸாரை கண்டவுடன் தப்பியோட்டம்

(கரணவாய்)

பொலிஸாரின் நடமாட்டத்தை கண்டவுடன் கசிப்பு கடத்திய நபர்கள் இருவர் கசிப்பை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தப்பித்து ஓடியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் வடமராட்சி முள்ளிச் சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில்மேலும்தெரியவருவதாவது,

வடமராட்சி முள்ளிச்சந்திப் பகுதியில் பொலிஸார் நேற்று மாலை 5 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த வழியாக வந்த இருவர் மோட்டார் சைக்கிளில் 13 1/2 லீற்றர் கசிப்பினை கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் வருகையை அவதானித்த அவ்விருவரும் மோட்டார் சைக்கிளையும் கசிப்பையும் அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் பொருட்களை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

# மீனவர்களின் பாதுகாப்பிற்கான விசேட தொலைபேசி இலக்கங்கள் 011-2346134, 0722244063

(கொழும்பு)

கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களின் உயிர் பாதுகாப்புக்காக விஷேட தொலைபேசி இலக்கம் இரண்டை கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு அறிமுகப் படுத்தி உள்ளது.


அதற்கமைய 011-2346134 மற்றும் 0722244063 என்ற இரண்டு இலக்கங்களே இவ்வாறு அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களாகும்.

இதேவேளை கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பில் இந்தத் தொலைபேசி இலக்கங்களுக்கு தெரிவிக்க முடியும் என்பதோடு இதன்பொருட்டு நவீன உயிர்காப்பு உபகரணங்களோடு வைத்தியர் உள்ளிட்ட 6 ஊழியர்களைக் கொண்ட குழுவுடனான உயிர் காப்பு படகொன்று சேவையில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர் மகிந்த அமரவரவின் அறிவுறுத்தலுக்கமைய இந்த ஏற்பாடுகளை இலங்கை உயிர்காப்பு நிறுவனம் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது. (செ-12)

# மகிந்தவை சிறையிலடைக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

கொடிய யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவ வீரர்களைக் காட்டிக் கொடுத்த இந்த அரசாங்கம், நாட்டுக்கும் யுத்தத்துக்கும் தலைமை தாங்கிய சேனாதிபதியான முன்னாள் ஜனாதிபதியை வேட்டையாடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிநத ராஜக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ நேற்று கடுவலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.

இதன்போது நீதிமன்றத்துக்கு விஜயம் செய்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மகிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசியுமான விமல் வீரவன்ஸ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யோஷித ராஜபக்ஷ நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதிலும் பிணை வழங்கப்படாது மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற கட்டட வளாகத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த விமல் வீரவன்ஸ, இந்த அரசாங்கம் அராஜக வழியில் நடப்பதாகவும், இராணுவ வீரர்களைக் காட்டிக் கொடுத்தது மட்டுமல்லாது, நாட்டை மீட்டெடுத்த தலைவரை சிறையில் அடைக்க முயற்சிப்பதாகவும் கூறினார்.

அவரை சிறையில் அடைத்து தமது அரசியல் பழிவாங்கலை நிவர்த்தி செய்யும் வரையில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறும் என்றும் கூறினார். (செ-12)

# எரிபொருட்களின் விலை குறைவடையாதது ஏன்?

## விளக்கம் கேட்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருடகளின் விலை குறைவடைந்த போதும், அதன் நன்மையை மக்களுக்கு பெற்றுகொடுக்காமைக்கான காரணத்தை விளக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறுகிய காலப் பகுதியில் நான்கில் ஒரு பகுதி குறைவடைந்துள்ளது. ஆனால் உள்நாட்டில் விலைக்குறைப்பை மேற்கொள்ள அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை.

அத்தோடு, அரசாங்கம் அளித்த வாக்குறுதிக்கமைய புதிய எரிபொருள் சூத்திரத்தை அறிமுகப் படுத்தவும் இல்லை.

இவ்விடயத்தில் பிரதமர், பெற்றோலிய வளத்துறை அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோர் கசப்பான கசாயத்தைக் குடித்த ஊமைகள் போல செயற்படுகின்றனர் என குறிப்பிட்டார்.

உலக சந்தையில் நிலவும் எரிபொருள் விலைக்கேற்ப உள்நாட்டில் எரிபொருள் விலையை சீராக்கும் வகையில், புதிய விலைச் சூத்திரமொன்றை அறிமுகப் படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## உரும்பிராயில்...

மணியளவில் உரும்பிராய் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இலக்கத்தகடுகள் இல்லாத மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேர் கொண்ட குழுவொன்று உரும்பிராய் சந்தியிலிருந்து மருதனார்மடம் செல்லும் பாதையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு,

உரும்பிராய் சந்தியிலுள்ள பல சரக்கு கடை, சீ.டி கடை, சலூன் கடை போன்ற 6 கடைகளுக்குள் கோடரி, கத்தி, வாள் என ஆபத்தை விளைவிக்கும்ஆயுதத்துடன்உள்நுழைந்து அங்கு நின்றவர்களை சரமாரியாக தாக்கியுள்ளது.

பின்னர் அங்கிருந்து மோட்டார் சைக்கிள்களில் அக்குழு அடாவடி புரிந்தபடி தப்பிச் சென்றுள்ளது.

இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடுகுறித்தகும்பலைவலை வீசித் தேடி வருகின்றனர். (செ-78)

## சைவ மாநாடு...

ரியர்கள், சைவப்புலவர்கள், பேச்சாளர்கள் என இந்து மதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் பலரது பங்குபற்றலுடன் இந் நிகழ்வு சிறப்புற நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வின் ஆதார சுருதி வரைஞராக இந்தியாவின் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் க.பாஸ்கரன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரை வழங்குவதற்காக தமிழ்நாடு சிதம்பரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த பிரம்மஶ்ரீ கணேச பரமேஸ்வர தீட்சிதர், நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தர்ம சாஸ்தா குருபீட முதல்வர் சிவஶ்ரீ தாணு மகாதேவக்குருக்கள், ஶ்ரீ பரமேஸ்வர தேவஸ்தான பிரதம குரு சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஶ்ரீ ப.மனோகரக் குருக்கள் ஆகியோர் வருகை தரவுள்ளமை சிறப்பம்சமாகும். (செ)

*(விரிவான செய்தி உள்ளே)*

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

கஞ்சா கலந்த பாக்கினை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 வயதுடைய இளைஞர் ஒரு வரை யாழ்ப்பாணம் சட்டவிரோத போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞனிடமிருந்து 25 கிராமும் 225 மில்லி கிராம் நிறையுடைய கஞ்சா கலந்த பாக்கினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபரான இளைஞனை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## தொடர் மோதல்...

சியாக இடம்பெற்று வருகின்ற இம் மோதல் சம்பவங்களில் ஒன்று நேற்றையதினமும் இடம்பெற்றுள்ளது.

முகாமைத்துவ கற்கை வணிக பீட மாணவர்களிடையே நேற்று நண்பகல் 12 மணியளவில் குழு மோதல் ஒன்று நடைபெற்றுள்ளது.

வணிகத்துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேபீடத்தில் கல்வி பயிலும் இரண்டாம் வருட இரண்டாம் பருவ மாணவர்களால் இரண்டாம் வருட முதலாம் பருவத்தைச் சேர்ந்த மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட மாணவ ஆலோசகரிடம் மாணவர்களால் முறையிடப் பட்டதைத் தொடர்ந்து இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த இரண்டாம் பருவ மாணவர்கள் 5 பேர் இனங் காணப்பட்டு அவர்களுக்கு கால வரையறையின்றிய வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவினை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிறப்பித்திருந்த நிலையில் இவர்கள் மீதான தண்டனை விசாரணைக் குழுவும் விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ளது. (செ)

## வட கொரியா...

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிகைை ஒன்றிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கொரிய தீபகற்பத்தின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படும் வகையில் சர்வதேச கட்டுப்பாடுகளை மீறி எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என வடகொரியாவை கேட்டுக்கொள்வதாகவும் அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

வடகொரியா கடந்த 7-ம் திகதி உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி நெடுந்தூரம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மகிந்தவுக்கு...

பக்ஷ மற்றும் கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சி மற்றும் அரசாங்கத்தில் இணைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஆரம்பிக்க உள்ள புதிய கட்சி தொடர்பான இறுதி பேச்சுவார்த்தை கடந்த 8 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மிரிஹானவில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்றதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பேச்சுவார்த்தையில் கூட்டு எதிர்க் கட்சியை சேர்ந்த பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.

புதிய கட்சி இரண்டு வாரங்களுக்குள் பதிவு செய்யப்பட உள்ளதாக தெரிய வருகிறது. (செ-12)

# ஜனாதிபதி...

களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ குணதாச குறிப்பிட்டுள்ளார்.

கோப்பாய், வலி வடக்கு மற்றும் தெற்கு, சாவகச்சேரி, காரைநகர் மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் சாட்சி விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், யாழ் குடாநாட்டில் கடந்த அமர்வில் கலந்துக் கொள்ளாத மருதங்கேணி பிரதேச மக்களுக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள அமர்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டார்.

குறிப்பாக யாழ்.குடாநாட்டிலிருந்து கிடைத்துள்ள 12 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆயுட்காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந் நிலையில் ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடிப்பது குறித்து ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.(செ-12)

# மாணவன்...

டன ஊர்வலமும் கையெழுத்துவேட்டையும் நடைபெறவுள்ளது.

பெற்றோர்களால் முன்னெடுக்கப்படவுள்ள இக் கண்டனப் பேரணியானது காலை 10 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரிமை தானதுக்கு அருகில் இருந்து ஆரம்பித்து யாழ் மத்திய பேருந்து தரிப்பிடத்துக்கு சென்று பொதுமக்களிடம் கையெழுத்துக்களை பெற்று அங்கிருந்துவட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் மற்றும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

தனியார்பேருந்துகளும் அரச பேருந்துகளும் ஒன்றுக் கொன்று முந்திச் செல்வதால் ஏற்படும் மரணமும் படுகாயங்களும் தொடர்ந்துநடைபெற்றவண்ணம் இருக்கின்றது. இது தொடர்பாக எந்த அதிகாரிகளும் முடிவெடுப்பதாக தெரியவில்லை.

எனவே இதனை வன்மையாக கண்டிக்கும் முகமாகஉயிரிழந்த சிறுவனை எமது மகனாகவும் சகோதரனாகவும் நினைத்துகாலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரைசகல தனியார் பேருந்துகளையும் சேவையில் ஈடுபடாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஏனைய துறையினர் 2 மணி நேரம் தமது பணிகளை நிறுத்தி இந்த கணடன ஊர்வலத்தில் பங்கு கொள்ளமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-9)

# அரசுக்கு எதிராக...

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை பேரவையின் ஆணையர், செயிட் அல் ஹுசைனின் இலங்கை விஜயம் தொடர்பில் மகிந்த நேற்று வெளியிட்டுள்ள தன்னிலை விளக்க அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் மக்களை கொலை செய்தது, அவர்களை சித்திரவதை செய்தது, வடக்கில் திட்டமிட்டே உணவுத் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது என்பனவற்றை உள்ளடக்கிய மனித உரிமைகள் பேரவையின் பக்கசார்பான அறிக்கை ஜெனிவாவில் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் வெளி நாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களைக் கொண்ட போர்க்குற்ற நீதிமன்றம் அமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது என மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரண்டாவதாக, போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இராணுவ வீரர்களை போர்க் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கு போதுமான சாட்சிகள் இல்லாமல் போனாலும், அவர்களை துறைரீதியான நடவடிக்கைள் மூலம் பதவி விலக்குவதற்கும் அரசாங்கம் இணங்கியுள்ளதாக அவர் மேலும தெரிவித்துள்ளார்.

ஜெனிவா பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டதன் மூலம், நாட்டுக்கு எந்த பாதகமும் ஏற்படாது என்று மக்களை நம்ப வைப்பதற்காக அரசாங்கம் சூட்சமமான காரியங்களை கையாண்டுவருவதாக தனது அறிக்கையில் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிபதிகளை உள்வாங்கும் விஷயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் இரு வேறு கருத்துக்களை தெரிவித்திருந்தனர் என சுட்டிக்காட்டியுள்ள மகிந்த, நாட்டின் தேசிய பாதுகாப்பு நலனிற்காக அரசிற்கெதிராக மக்கள் அணி திரள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-12)

# இராணுவ...

மாக பீரங்கித் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். பாலியல் வல்லுறவுகளையும், ஏனைய பாலியல் வன்முறைகளையும் நிகழ்த்தியிருந்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளமை மேலும் சரணடைந்தவர்கள் நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்யப்பட்டமைக்கான காணொளி ஆதாரங்களையும் சனல் 4 வெளியிட்டுள்ளது.

இந்த மீறல்களுக்கு பொறுப்புக்கூற இலங்கை அரசாங்கம் தவறியதனாலேயே, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், மீளவும் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றும் நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இது பரந்தளவிலான போர்க்குற்ற மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூத்த இராணுவ அதிகாரிகளை இலங்கை அரசாங்கம் பாதுகாக்கலாம் என்ற சமிக்ஞையையே வழங்கியிருக்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறுப்புக் கூறல் தொடர்பாக கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுக்காது அதனை தீவிரமாக முன்னெடுத்து, இலங்கை மக்களுக்கும், ஐ.நாவுக்கும் அர்த்தமுள்ள வகையில் தனது கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும்.

போர்க்குற்றங்களுக்கு இந்த அரசாங்கம் நீதியை வழங்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று நம்பியிருந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பத்தினரின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் பொன்சேகாவின் நியமனம் அமைந்திருக்கிறது.

எல்லா இலங்கையர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்று தலைவர்கள் உறுதியான நிலையை காண்பிக்க வேண்டிய இந்த நேரத்தில் இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும் பொறுப்புக்கூறல் விடயத்தில் வருத்தமளிக்கும் சமிக்ஞைகளை வெளிப் படுத்தியிருக்கின்றனர்.

சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற ஆசனமும், உயர் இராணுவப் பதவியும், அளிக்கப்பட்டிருப்பதானது, இவர்களின் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரான நல்லெண்ணத்தை அச்சுறுத்துவதாக உள்ளது என்றும், பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.(செ-12)


போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் (சமுர்த்தி)
2 PM - 4 PM சனி, ஞாயிறு

SLEAS, SLAS 12 PM - 2 PM சனி, ஞாயிறு
வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(C-3671)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
021 222 8148
021 568 9477
077 846 5721
077 314 4762



கணினிதிருத்துதல் பயிற்சியும் வேலைவாய்ப்பும்!

கணினி திருத்துதல் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு எமது நிறுவனத்தில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சியின் பின்னர் 100பேர் கொண்ட எமது நிறுவன கணினி திருத்த அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

GUNA BEST PC Computer Repair
50/12, Vairavar kovil lane, Hospital Road, Jaffna. Mob.0779086737
லப்டொப் டெஸ்க்டொப் கணினி திருத்தம் (வீடுகளுக்கே வந்து) விற்பனை
பாவித்தகணினி வாங்குதல் பாதுகாப்புகமரா விற்பனை பொருத்துதல்



75வது அகவை நாள்

மனம் நெகிழ
வாழ்த்துகிறேன்



வேல் ஆனந்தன்

கீழைத்தேய ஆடற்கலையை
கலையின் உருவில்
ஈழத் துலகிற்கு
அறிமுகம் தந்தார்.

பாரதத்தில் பரதம் பயின்று
பரந்த நாட்டியத்தின்
வடிவங்கள் யாவையும்
படிகளாக்கி கொண்டார்.

நெடுந்தீவு மண் தந்த முத்து
நாட்டிய உலகின் சொத்து
"வேல்" எழுந்து காத்திடும்
கலை நல்வுலகை

இவர் தனது நாட்டியக் கலையின் பட்டறிவுகளை முழுமையாக்கி "ஆடல் உலகில் எனது சுவடுகள்" எனும் நூலாக்கி 13.02.2016 இல் பி.ப 3 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் வெளியீடு செய்யவுள்ளார். இவ்விழாவுக்கு அனைவரும் வருகை தந்து இக்கலைஞனை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(3568)

த.குருகுலராசா



ஆங்கில வகுப்பு

தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்கு மான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0767070069
M.Suren (3565)



போட்டிப் பரீட்சை வகுப்புகள்

SLEAS மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக் குரிய வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிறும் 10-4 மணிவரை தொடர்ச்சியாக பரீட்சை நடைபெறும் திகதி வரை நடைபெறும்.

குறிப்பு: நேற்று வெளியான அதிபர் சேவை பரீட்சை முடிவுகளை அவதானித்து உங்கள் வழிகாட்டி நிறுவனத்தை தெரிவு செய்து கொள்ளவும். T.P.: 0766883394

SLAS திறந்த / மட்டுப்படுத்திய SLEAS திறந்த பரீட்சைகளுக்குரிய வகுப்புகளும ஞாயிறு 9-4 மணிவரை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி,கொமர்சல் வங்கி அருகில்)



வாசல் திறக்கிறது
CANADA
அனுபவம் வாய்ந்த கனேடிய குடிவரவு முகவர்கள் ஊடாக...

Student Visa
O/L or A/L உடன் Diploma / Degree கற்கைநெறி நிறைவில்
தொழில் வாய்ப்புடன் குடியுரிமை (PR)
Express Entry Visa
Degree / Diploma வுடன் 1 வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள்

SIKARAM VISA SOLUTIONS
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1. மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



சைவத்தமிழ் அன்னையின் மணிமகுட வாழ்த்துக்கள்

17.02.2016 இல் அகவை 60 காணும்
திரு.அப்பாத்துரை ஈஸ்வரநாதன் (முன்னாள் அதிபர்)



பூநகரி மண்ணில் ஆசிரியராய் மலர்ந்தீர்
உரும்பிராய் பதியில் அதிபராய் முகிழ்ந்தீர்
உடுவில், நெடுந்தீவு, தெல்லிப்பளையில்
கோட்டக்கல்விப் பணிப்பாளராய் திகழ்ந்தீர்
கல்விப் புலத்தின் கலங்கரை விளக்கானீர்
நாத சத்தியுடன் பதினாறும் பெற்று மகிழ்ந்தீர்
நீண்ட ஆயுளுடன் நிறைவாழ்வு
வாழ்ந்திட வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் கழகம், கல்விசாரா ஊழியர்
யா/உரும்பிராய் சைவத் தமிழ்
வித்தியாலயம்

(சி-3750)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.